பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | பங்குனி 17 | திங்கட்கிழமை | 02.04.2023 | கதிர்144

## ஆட்சி கலைந்த உள்ளாட்சிகளினது செயற்பாடுகளுக்கான அறிவுறுத்தல்

### ஆளுநரால் வழங்கப்பட்டது

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சபைகளின் ஆட்சிக் காலம் மார்ச் 19ஆம் திகதி நிறைவுக்கு வந்த பின்னர் அவற்றை நெறிப்படுத்தும் முகமாக இன்னோரன்ன முயற்சிகளை வடக்கு மாகாண ஆளுநர் எடுத்துள்ளார் என ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாகாண சபையொன்று இல்லாத காலப்பகுதியில் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரது நிறைவேற்றுக் கடமைகளையும் ஆற்றிவரும் ஆளுநர் உள்ளூராட்சி மன்றங்கள் சபைகள் இல்லாத காலங்களிலும் இடையறாத பொதுமக்கள் சேவைகளை ☞2

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் இலங்கை நாட்டையே அழிக்கும்

### சிறிதரன் எம்பி எடுத்துரைப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டம் இலங்கையையே அழிக்கும். நீங்கள் முகநூலகளிலெல்லாம் இனி எழுத முடியாது. வாட்ஸ்ஆப் மூலம் படங்களை அனுப்பினால் பிடித்துசென்று தூக்குத்தண்டனை விதிப்பார்கள்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் வட்டார நிர்வாக தெரிவும், மக்கள் சந்திப்பிலும் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையிலே மீண்டும் ஒரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவருகின்றார்கள். ஏற்கனவே இருக்கின்ற பயங்கரவாத தடைச்சட்டத்தின் மோசமான சரத்துக்கள் நீக்கப்பட்டு மக்களுக்கு நன்மை தரக்கூடிய வகையில் நியாயமானதாக அது இருக்கும் என நாம் கருதினோம். ஆனால் புதிதாக வருகின்ற பயங்கரவாத ☞2

## இது ரகசியம் அல்ல!

தெருவில் போய்க்கொண்டிருந்த நடிகர் வடிவேலுவை வலிந்து அழைத்து தேநீர் கடையில் வெளியூர்காரனுக்குச் சமதையாக அமர வைக்கின்றேன் என்று சேற்றில் விழ வைத்த நகைச்சுவைக் காட்சி ஒன்று தமிழ் சினிமாவில் பிரபலம். அது மாதிரித்தான் வெடுக்குநாறி மலையிலும் அமைச்சரின் அள்ளக் கையொன்று ''அமைச்சரே சொல்லிட்டார்'' என்று செய்யப்போன காரியத்தால் எல்லாம் ஊற்றி மூடிக்கொண்டது.

வெடுக்குநாறிமலையில் இருந்த ஆதி லிங்கம் பெயர்த்து எடுத்துச் செல்லப்பட்டதும், ஏனைய கடவுள் விக்கிரங்கள் அடித்து உடைக்கப்பட்டு அந்த ஆலயமே இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டதும்தான் கடந்த சில தினங்களாகவே பரப்பான செய்தியாக இருந்து வந்திருக்கின்றது. இந்தச் சம்பவம் குறித்த தகவல்கள் வெளியான உடனேயே அது பற்றி அமைச்சர்கள்டக்ளஸ்தேவானந்தாவும் ☞2

## கதிர்காமத்தில் துப்பாக்கிச் சூடு ஒருவர் காயம்

கதிர்காமம் - பழைய எழுமலை வீதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார்..

உந்துருளியில் வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் 46 வயதுடைய பிரதீப் லக்மால் என்ற 'உடவத்தே மஞ்சு' என்பவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் ஒரு கராத்தே ஆசிரியர் என்றும், சந்தேகநபர்கள் அவரை துரத்திச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## கடும் காற்றால் முரசுமோட்டையில கூரைகள் சேதம்

கிளிநொச்சிமாவட்டத்தில் முரசு மோட்டைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை வீசிய கடும் காற்றுக் காரணமாக பல கட்டடங்களின் கூரைகள் தூக்கி வீசப்பட்டும், பிய்த்தது எறியப்பட்டும் உள்ளன.



சில வர்த்தக நிலையங்களின் கூரைத் தகடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் வர்தக நிலையத்தில் இருந்த பல பொருட்கள் மழையில்



நனைந்து சேதமடைந்தன. கால்நடைப் பண்ணை ஒன்றிலும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது கால் நடைகளின் கொட்டகைகள் ☞2

## தேர்தலைத் திட்டமிட்டபடி நடத்த இரு மகாநாயக்கர்கள் வலியுறுத்து

### அஸ்கிரிய, மல்வத்து பீடங்களிலிருந்து ஜனாதிபதிக்குக் கடிதம்

**உள்ளூராட்சிசபைத்தேர்தலைதிட்டமிட்டபடி நடத்துமாறு அஸ்கிரிய மற்றும் மல்வத்து பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.**

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏப்ரல் 25 நடத்துவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நாள் குறித்தது. அதற்கு முன்னோடியாக மார்ச் 28, 29, 30, 31 மற்றும் ஏப்ரல் 4 ஆகிய திகதிகளில் தபால் மூல வாக்களிப்பை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அத்திகதிகளில் தபால் மூல வாக்களிப்பை நடத்த முடியவில்லை.**

**தேர்தலுக்குத் தேவையான நிதியை, குறிப்பாக தேர்தல் வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்கான நிதியை திறைசேரி விடுவிக்காததன் காரணமாக தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து ஏப்ரல் 25 உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடப்பது கேள்விக்குறியாகி உள்ளது.**

**ஏப்ரல் 10ஆம் நாளுக்கு முன்னர் நிதி விடுவிக்கப்பட்டால்கூட குறிப்பிட்ட தினத்தில் தேர்தலை நடத்திவிட முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் சட்டத்தரணி புஞ்சிகேவா தெரிவித்திருக்கிறார்.**

**இந்தநிலையிலேயே இருபெரும்பௌத்த பீடங்களினதும் மகாநாயக்கர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளனர். அந்தக் கடிதத்தில் தேர்தலைத் திட்டமிட்டபடி** ☞2

## அரச ஊழியர்களிடமிருந்து கடன் வசூலிப்பை நிறுத்தக் கோரிக்கை

அரச ஊழியர்கள் பெற்ற கடனுக்கான ஏப்ரல் மாத கொடுப்பனவை வசூலிக்காமல் பிற்போட நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏப்ரல் மாதம் சகல மக்களுக்குமான பண்டிகை மாதமாகும். இந்தப் பண்டிகைக் காலத்தில் அதிக செலவுகள் ஏற்படுவது இயல்பாகும். இந்நிலையில் கடன் பெற்ற அரச ஊழியர்களின் கடன் கழிப்பனவுகள் போக எஞ்சிய தொகை பண்டிகையை கொண்டாட போதுமானதாக இல்லை என பெரும்பாலான அரச ஊழியர்கள் தனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைக் கவனத்தில் கொண்டு ஏப்ரல் மாதத்துக்கான கடன் கழிப்பனவை தள்ளிப்போட நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பெண் சட்டத்தரணிகள் ஆடை முஸ்லிம்கள் போர்க்கொடி

பெண் சட்டத்தரணிகளின் ஆடை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள புதிய நெறிமுறைகள் குறித்து முஸ்லிம்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். முஸ்லிம் கலாசார ஆடையான ஹபாயாவுக்கு அதில் அனுமதி வழங்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பெண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் எதிர்காலத்தில் நீதிமன்றத்திற்கு கறுப்புப் பாவாடை மற்றும் வெள்ளை மேற்சட்டை அல்லது கறுப்பு நீளக் கால் சட்டையும் வெள்ளை மேற்சட்டையும் அணிந்து செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

உயர்நீதிமன்றவிதிகளில் திருத்தம் செய்யப்பட்டு இந்த வாரம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் புதிய ஆடை குறித்த இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு வெள்ளை ரவிக்கை மற்றும் கருப்பு கோட் மற்றும் காலணிகள் கொண்ட கருப்பு நீளக் கால்சட்டை அல்லது வெள்ளை ரவிக்கை மற்றும் கருப்பு கோட் மற்றும் காலணிகள் கொண்ட ஒரு கருப்பு பாவாடை அணியலாம்.

இதுவரை வெள்ளை, கருப்பு, சாம்பல் அல்லது மெல்லிய ஊத நிறங்களில் சேலை மற்றும் ஜாக்கெட் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது.

புதிய விதிகளின்படி, கால்சட்டையின் நீளம் கணுக்கால் வரை நீளமாக இருக்க வேண்டும், அதே நேரத்தில் பாவாடையின் நீளம் முழங்காலுக்கு கீழே இருக்கவேண்டும். சட்டை அல்லது ரவிக்கை உயர் கழுத்து மற்றும் நீண்ட கை இருக்க வேண்டும்.

ஆண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கான ஆடைக் குறியீடு மாறாமல் உள்ளது.

இந்தப் புதிய விதிகளின் கீழ் முஸ்லிம் பெண்களின் ஹபாயாவுக்கு இருந்த இடம் நீக்கப்பட்டுள்ளது என்று முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர். முன்னர் ☞2

## தமிழ் மக்கள் சமஷ்டியை கேட்கவில்லை அரசியலாளர்களின் கோரிக்கையே அது

### சரத் வீரசேகரவின் புதிய கண்டுபிடிப்பு



தமிழ் மக்கள் சமஷ்டியைக் கேட்கவில்லை. பிரிவினையை விரும்பும் தமிழ் அரசியல்வாதிகளும் புலம்பெயர் தமிழர்களுமே சமஷ்டியைக் கேட்கின்றனர்.'

இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் தெற்கு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்தார்.

13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் சமஷ்டி தொடர்பில் அந்தச் செவ்வியில் அவர் தெரிவித்திருப்பதாவது:

கேள்வி:- 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?

பதில்:-13 முற்றாக அகற்றப்பட வேண்டும் என்பதுதான் எனது நிலைப்பாடு. 13 ஐ நடைமுறைப்படுத்தினால் ஒற்றையாட்சியின் கீழ் இருக்கின்ற நாடு சமஷ்டி ஆட்சிக்கு உட்படும்.

ஒற்றையாட்சியின் கீழ் நாடு முழுவதும் ஒரே நீதி. சமஷ்டி ஆட்சியின் கீழ் மாகாணத்துக்கு மாகாணம் நீதி வேறுபடும். இதனால் நாடு துண்டு துண்டாகப் பிரியும்.

வடக்குத் தமிழர்களின் துன்பத்தைப் போக்குவதற்குத்தான் சமஷ்டி தேவை என்று தமிழ் அரசியல்வாதிகள் கேட்கின்றார்கள். அப்படியென்றால் 52 வீதமான தமிழர்கள் வாழ்வது தெற்கில். வடக்குக்குத் சமஷ்டியைக் கொடுத்தால் தெற்குத் தமிழர்களின் பிரச்சினைகளை அது எப்படித் தீர்க்கும்?

கேள்வி:- சமஷ்டியின் தேவை யாருக்கு? மக்களுக்கா...? அரசியல்வாதிகளுக்கா...? ☞2

## விடுதலையின் பின் இலங்கையில் 1,800 இந்துக் கோவில்கள் அழிப்பு

### புலம்பெயர் தமிழர் அமைப்பு குற்றச்சாட்டு

இலங்கை பிரித்தானியாவின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் ஆயிரத்து 800 இந்துக் கோவில்கள் மற்றும் இந்துப் பாரம்பரியத் தலங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று தமிழர் நடவடிக்கைக் குழு என்னும் புலம்பெயர் அமைப்பு ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தைத் தளமாகக் கொண்டியங்கும் இந்த அமைப்பு இலங்கையில் இந்துப்பாரம்பரியம் அரசால் திட்டமிட்டு அழிக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டுகின்றது.

அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்றதில் இருந்து சுமார் ஆயிரத்து 800 இந்து கோவில்கள் மற்றும் பாரம்பரிய தலங்களை அழித்துள்ளது. தற்போது நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள இந்து கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் கோவில்கள் இலக்கு வைக்கப்படுகின்றன.

கீரிமலையில் ஐந்து நூற்றாண்டு பழமை வாய்ந்த சிவன் கோவில், இராணுவ ஆக்கிரமிப்பின் மறைவின் கீழ் அழிக்கப்பட்டுள்ளதுடன், இடிக்கப்பட்ட கோவிலுக்கு பதிலாக, அங்கு ஒரு ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்துக்கள், இறந்தவர்களின் இறுதி சடங்குகளை செய்யும் இடம், யோகியின் பழங்கால நினைவுச் சின்னங்கள் அமைந்துள்ள இடம் மற்றும் முழு நாட்டிலும் உள்ள இந்துக்களுக்கு புனிதமான தன்மையை கொண்ட ☞2

### தவறுகள் இருந்தால்

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தை நாடுவோம்

### சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

ஆட்சியாளர்கள் அறிமுகப்படுத்தியுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தத் தயாராகி இருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்காக மூத்த சட்டத்தரணிகள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் கௌசல்யா நவரத்னே தெரிவித்தார்.

''இந்த ஆட்சியினால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை ஆய்வுசெய்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக மூத்த சட்டத்தரணிகள் அடங்கீய குழு ஒன்றை ஏற்கனவே நியமித்திருக்கின்றோம்'' என்றார் அவர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஆட்சியாளர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. புதிய சட்டம் தொடர்பான வரைவு ஏற்கனவே வர்த்தமானி ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜீவன் தொண்டமானும் அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துரைத்தனர்.

வழக்கம்போலவே தன்னைநல்லவராகக்காட்டிக் கொண்டுஅந்தச்சம்பவத்தைக் கண்டித்த அரசுத் தலைவர் ஆலயத்தை அதேயிடத்தில் மீண்டும் நிலைநிறுத்த நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையானவற்றைப் பார்க்கும்படி அமைச்சர்கள் இருவரிடமும் போகிற போக்கில் சொல்லிச் சென்றுவிட்டார். அது தொடர்பாக அமைச்சரவைத் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை.

மறுநாளே அமைச்சர்கள் இது தொடர்பில் ஊடகங்கள் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தினார்கள். ஆதி லிங்க ஆலயம் அதேயிடத்தில் மீண்டும் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அவர்கள் சொன்னதை நம்பி மீளுருவாக்கப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டன. ஆலய நிர்வாகத்தினர் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இந்து மாமன்ற உபதலைவர் ஆறு. திருமுருகன் உருவச் சிலைகளையும் லிங்கத்தையும் வழங்கினார்.

இவற்றையெல்லாம் அடுத்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் உள்ள புண்ணிய காலத்தில் சிவலிங்கத்தை மலையில் மீண்டும் அது இருந்த அதேயிடத்தில் பிரதிஸ்டை செய்வது என்று ஆலய நிர்வாகம் முடிவெடுத்தது. இதற்காகச் சிலைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

அவற்றை மீள இருந்த இடத்திலேயே வைப்பதற்கு ஆலய நிர்வாகத்தினர் திட்டமிட்டுக் கொண்டிருந்த நிலையில். அமைச்சர் மற்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் ஆகியோரின் அள்ளக்கையான கலைச்செல்வன் என்பவர் சனிக்கிழமைகாலை 3 கட்டுமானத் தொழிலாளர்களையும் அழைத்துக் கொண்டு மலைக்கு வந்துள்ளார்.

சிலைகளை அவை முன்பு இருந்த அதேயிடத்திலேயே மீள வைக்கலாம் என்று ஆலய நிர்வாகத்தினர் சொல்லியபோதும், அதையெல்லாம் புறக்கணித்த கலைச்செல்வன், அமைச்சரே சொல்லிவிட்டார் இனி ஒரு பிரச்சினையும் இல்லை. அதெல்லாம் நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம் என்று கூறி, சிவலிங்கம் முதலில் இருந்த இடத்தை விட்டு வேறொரு - புதிய - இடத்தில் சிவலிங்கத்தை வைப்பதற்கு சிமெந்து மேடை அமைத்துள்ளார்.

அங்கே புதிதாகக் கிடங்கு வெட்டி, கொங்கிறீற் போட்டு கற்களை வைத்துக் கட்டுமானப் பணிகள் எல்லாம் செய்வித்துள்ளார். அப்போதும், மலையில் ஏதாவது புதிய கட்டமானங்கள் செய்தால் தொல்லியல் திணைக்களத்தினர் பிரச்சினை எடுப்பார்கள் என்று நிர்வாகத்தினர் சொல்லிப்பார்த்திருக்கிறார்கள். கேட்கவில்லை. சரி அமைச்சரின் ஆள் ஏதோ அவர்களே பார்த்துக்கொள்ளட்டும் என்று இவர்களும் ஒதுங்கிக் கொண்டார்கள்.

ஆனால் பிரச்சினை பூதாகாரமாகி, புதிய கட்டுமானம் செய்யப்பட்டதாகக்கூறி நெடுங்கேணிப் பொலிஸார் அங்கு வந்து கூலிக்கு வந்திருந்த மூவரையும் கைது செய்து தம்மோடு அழைத்துச் சென்றுவிட்டது. அதுவரை அமைச்சர், அமைச்சர் என்று அங்கே நின்று ''கெத்து'' காட்டிக்கொண்டிருந்த அள்ளக்கையையும் நாடாளுமன்ற உறுப்பினரையும் அதன் பிறகு காணவேயில்லை. கூட்டிக்கொண்டு வந்த கூலியாட்களையும் நடுத்தெருவில் அல்ல நடுக்காட்டில் கைவிட்டு ஓடிவிட்டார்கள். பின்னர் ஆலய நிர்வாகத்தினனரே அந்த மூவரையும் பொலிஸார் விடுவிக்கும்வரைகூட இருந்து பார்த்துக்கொண்டவர்கள்.

மலையில் புதிய கட்டுமானங்களை நிறுவப் போய்த்தான் தொல்பொருள் திணைக்களம் ஆலய நிர்வாகத்தினர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. அந்த அனுபவத்தில்தான் புதிய கட்டுமானங்கள் இல்லாமல் சிலைகளை மட்டும் வைத்து ஆலயத்தை மீளமைத்துவிட நிர்வாகத்தினர் முயன்றனர். ஆனால் அள்ளக்கைகளின் அலப்பறையால் எல்லாமும் வீணாகிவிட்டது.

கடைசியில் நேற்று அங்கு வந்த அமைச்சர்களும் ஏன் பிரச்சினை என்று நீதிமன்றம் என்ன சொல்கிறது என்று பார்த்துவிட்டுச் செய்யலாம், அவசரப்படத் தேவையில்லை என்று கூறித் திரும்பிவிட்டார்கள். அமைச்சரின் அள்ளக்கை எல்லாவற்றையும் குழப்பாமல் இருந்திருந்தால் சிலைகளைப் பிரதிஸ்டை செய்திருக்கலாம். குறைந்தபட்சம் ஆலயத்தை மீள் பிரதிஸ்டை செய்தாயிற்று என்கிற நின்மதியாவது கிடைத்திருக்கும்.

வடிவேலுவை சேற்றுக்குள் தள்ளிவிட்டது போன்றே அமைச்சர் அமைச்சர் என்று சொல்லிச் சொல்லியே அவரது அள்ளக்கை கடைசியில் அவராலும் ஒன்றும் கிழிக்க முடியாது என்கிற நிலையை ஏற்படுத்தி விட்டுள்ளது.

**இடிமின்னல்**

## சிறிதரன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தச்சட்டத்திலே, ஒருவர் பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால் அவர் தூக்குத் தண்டனைக்கும் உள்ளாக்கப்படுவார் என்று அதில் தெளிவாகச் சொல்லப்படுகின்றது.

இப்பொழுதுதான் சிங்கள மக்கள் விழித்துக்கொள்கின்றார்கள்.

சிங்கள இளைஞர் சகோதரிகள் அரகலய போராட்டம் தொடங்கி ஓராண்டை நெருங்கியிருக்கின்றார்கள். சிங்கள மக்கள் இந்த நாட்டில் ஒரு கொடூரமான மனிதரை தங்களுடைய அரகலய போராட்டத்தின் ஊடாக இந்த நாட்டைவிட்டே கலைத்தார்கள்.

கலைத்த பிற்பாடுதான், இந்த நாடு ஒரு புதிய மாற்றத்துக்குள் வந்தது. இந்த நாட்டுக்கு தற்பொழுது ஒரு ஜனாதிபதி வந்திருக்கின்றார்.

கச்சல் மாத்திரைகளை உள்ளெடுப்பதற்காக மேலே இனிப்பு பூசி தருவார்கள். அதுபோன்று ஜனநாயக முலாம் பூசப்பட்ட லிபரல்வாதி என்று சொல்லப்படுகின்ற ஒரு பயங்கரவாதி இந்த நாட்டினுடைய ஜனாதிபதியாக நியமனம் பெற்றிருக்கின்றார்.

அவர் ஒருவர்தான் மக்களால் தெரிவுசெய்யப்படாமல், விகிதாசார பட்டியலிலே நாடாளுமன்றத்துக்குள் வந்து ஜனாதிபதியானவர். அவருடைய ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனம் மூலமே அவர் நாடாளுமன்றம் வந்தார். அங்கே ஏற்கனவே இருக்கின்ற கொள்ளையடித்த 134 பேருடைய வாக்குகளை பெற்று அவர் இந்த நாட்டுக்கு ஜனாதிபதி ஆகிவிட்டார்.

அவர் ஜனாதிபதி ஆகியதும், மிக மோசமான பயங்கரவாததடைச்சட்டத்தை கொண்டுவருகின்றார். அந்தச் சட்டத்தின் ஊடாக யாரும் நிமிர்ந்து பேச முடியாது. நீங்கள் முகநூலகளிலெல்லாம் இனி எழுத முடியாது. வட்ஸ்ஆப் மூலம் படங்களை அனுப்பினால் பிடித்து சென்று தூக்குத் தண்டனை விதிப்பார்கள்.

நானும் 6 தடவை 4ம் மாடிக்குவிசாரணைக்குபோய் வந்தேன். இது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்தான் அதைச் செய்தார்கள். இந்தப் பயங்கரவாத தடைச்சட்டத்திற்குள் மாற்றம் என்று சொல்லிக்கொண்டு, மீண்டும் மக்களை தெருவுக்கு கொண்டுவரும் வேலையை இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது.

சிங்கள மக்கள் ஒரு காலத்தில் இந்தச் சட்டத்தின் பாதிப்பை உணரவில்லை. ஆனால், இந்தப் பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் நாங்கள் கொல்லப்பட்டோம். அந்த நேரத்தில் சிங்கள மக்கள் அதை உணரவில்லை. சிங்கள சகோதர சகோதரிகள் அதனை யோசிக்கவில்லை. ஆனால் இன்று அவர்கள் தலையைல் இந்த குண்டு விழுகின்றது. இன்னொரு இனத்தின் மீது என்னத்தை ஏவினார்களோ அதையே தன் இனத்தின் மீதும் இப்போது இந்த சிங்கள அரசு செய்கின்றது.

ஜே ஆர் ஜெயவர்த்தன 40 வருடங்களிற்கு முன்னர் இந்த சட்டத்தினைக் கொண்டு வந்தார். எதிர்க்கட்சி தலைவராக இருந்த அமிர்தலிங்கம் இருந்தபொழுது, 3 மாதங்களிற்குள் இந்தப்பிரச்சினைக்கு தீர்வு பெற்று தருவதாகவும், இந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு ஆதரவு வழங்குங்கள் என்று கேட்டனர். ஆனால், 16 நாடாளுமன்ற ஒறுப்பினர்களும் ஆதரவு வழங்கவில்லை. ஆனாலும் அதனை எதிர்க்காது விட்டது மாபெரும் தவறு.

சட்டத்தை இயற்றிய ஜே.ஆர். தீர்வும் தரவில்லை. 40 வருடங்களிற்கு மேலாக கிட்டத்தட்ட 4 லட்சம் மக்கள் போராளிகளையும் இந்த சட்டத்திற்கு ஊடாகவே இந்த மண்ணில் கொன்று குவித்திருக்கிறார்கள்.

இவ்வளவும் நடந்ததற்கு பிற்பாடுதான் சிங்கள மக்கள் விழித்திருக்கின்றார்கள். இது மிக அகோரமான சட்டம். இந்த நாட்டு மக்களை பாதிக்கின்ற சட்டம். எங்களுடைய மக்களின் தலைக்கும் சேர்ந்து திரும்பி வந்திருக்கின்றது.

நாங்கள் சுதந்திரமாக வாழவில்லை. எங்களைச் சுற்றி இராணுவ முகாம்கள் தான் இருக்கின்றன. வடக்கிலும் கிழக்கிலும் கிட்டத்தட்ட 2 லட்சத்துக்கு மேற்பட்ட படைகள் குவிக்கப்பட்டு நாங்கள் கிட்டத்தட்ட திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்டிருக்கின்றோம்.

நான் இங்கு பேசிக்கொண்டிருக்கும் விடயத்தைக்கூட தொலைபேசி ஊடாக எடுத்துக் கொண்டிருப்பார்கள். உளவாளிகள் இருப்பார்கள். மோசமான உலகத்திற்குள் தான் கருத்துக்களைக்கூடி பேச முடியாமல் சுதந்திரமாக வாழ முடியாத இனமாக தன்னுடைய மோழி, பண்பாடு எனும் அடையாளத்தை நிரூபிக்க முடியாத இனமாகவும் நிலைநிறுத்த முடியாத இனமாகவும் நாங்கள் இருக்கின்றோம்- என்றார்..

## தேர்தலைத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தும்படி அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி மக்களின் இயல்பு வாழ்வை மீளக் கொண்டுவரவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட ஒட்டுமொத்தச் சுமையையும் மக்கள் தலையில் சுமத்தாமல், பொது நிதியை சரியாக முகாமை செய்தல், ஊழலை ஒழித்தல், பொது வளங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்தல், மக்கள் பிரதிநிதிகள் வரன்முறை இல்லாத வரப்பிரசாதங்களை அனுபவிப்பதை நிறுத்துதல் போன்ற யதார்த்தபூர்வமான நடவடிக்கைகளின் மூலம் பொதுமக்களின் துன்பத்தைக் குறைப்பதற்கு ஆட்சியாளர்கள் கட்டாயம் செயற்படவேண்டும்” என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

இதற்காகமாநகரஆணையாளரும் சகல சபைகளின் செயலாளர்களும் மிகக்கவனமாகப் பணியாற்ற வேண்டும் எனக் கூறியுள்ளார்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களிடமிருந்து கூடுதலான கண்காணிப்பு நடவடிக்கைகளையும் எதிர்பார்ப்பதாக ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உடன் அமுலுக்கு வரும் வகையில் பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சபை வருமானங்கள் குறித்து சபை செயலாளர்களுக்கு இலக்குகள் வழங்கப்பட்டு அவர்களது வருடாந்த செயலாற்றுகை மதிப்பிடலில் உள்வாங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களின் ஆய்வு உத்தியோகத்தர்கள் சபைகளின் செலவினங்கள் தொடர்பான கண்காணிப்புக்காகவும் அறிக்கையிடலுக்காகவும் தொடர்ச்சியான விஜயங்களை மேற்கொள்ளவுள்ளார்கள். அத்துடன் சகல உள்ளூராட்சிமன்றங்களின் தினசரி வருமான செலவீனங்கள் இணைய மூலம் கணக்காய்வு செய்யவுள்ளார்கள்.

சபைகளின் காலாந்தரமான வருமான செலவின பகுப்பாய்வுகள் கணனிமயப்படுத்தப்படும். சபைகள் தங்களது மூலதன மற்றும் நானாவித செலவினங்களை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பாதீட்டுக்கு இணங்க மேற்கொள்வது கண்காணிக்கப்படும்.

வெளிநாட்டுநிதிவழங்கலுடனான செயற்றிட்டங்கள் ஆளுநரின் நெருங்கிய கண்காணிப்புக்குட்படுத்தப்படும்.

சபைகள் தங்களது வருமான மிகைகளிலிருந்து நிதி தேவைப்படும் சபைகளுக்கு இலகு கடன்கள் பெறுவது வசதிப்படுத்தப்படும்.

மாகாண சபைக்குச் சொந்தமான திருத்தம் செய்ய வேண்டியவாகனங்கள்சபைச் செலவினத்தில் திருத்தப்பட முடியுமானால் அச் சபைகள் அவற்றைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியும்.

இடையறாததும் விரைவான சேவை வழங்கலுக்காகவுமாக உள்ளூராட்சித் திணைக்களத்துக்குள்ளான ஆளணிப் பரம்பல் சீராக்கப் பொறிமுறையொன்று வகுக்கப்படும்.

எல்லாச் சபைகளுக்கும் மாதத்தில் ஓர் பொதுவான நாள் குறிக்கப்பட்டு அந்நாளில் திறந்த அபிருத்திக் கலந்துரையாடலுக்காக பொது மக்கள் அழைக்கப்படுவார்கள். அதில் வசதிப்படுத்துநர்களாக வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருப்பார்கள்.

மாகாண உள்ளூராட்சி அமைச்சும் மாகாண வருமானத் திணைக்களமும் இணைந்து சபைகளின் வருமானங்களை அதிகரிப்பது தொடர்பில் ஆளுநருக்குப் பிரேரணைகளை முன்வைக்கும்.

மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும் உள்ளூராட்சி ஆணையாளரும் இரு மாதங்களுக்கு ஒரு தடவை மேற்படி விடயங்களை மீளாய்வுக்கு உட்படுத்துவார்கள் - என்றுள்ளது

## தமிழ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில்:- இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் சமஷ்டியைக் கேட்கவில்லை. பிரிவினையை விரும்பும் தமிழ் அரசியல்வாதிகளும் புலம்பெயர் தமிழர்களுமே சமஷ்டியைக் கேட்கின்றனர். சில சிங்கள அரசியல்வாதிகளும் இதற்கு உதவுகின்றனர்.

கேள்வி:- 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பது இந்தியாவா?

பதில்:- ஆம்.. தமிழ் நாட்டின் ஆதரவைப் பெறுவதற்காகத்தான் இந்திய அரசு 13ஐ வடக்குக்குக் கொடுப்பதற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.13 ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவால் எமக்குப் பலவந்தமாகத் திணிக்கப் பட்டதுதான்.

இதில் இருக்கின்ற பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் பிரதிப் பொலிஸ்மா அதிபர் முதலமைச்சரின் கீழ் வருவார். அப்போது பொலிஸ் அரசியல்மயமாகிவிடும்.

கேள்வி:- 13 ஆல் நாடு பிரிக்கப்படும் முறைமை பற்றிக் கூற முடியுமா?

பதில்:- அநேகமாக 13 இல் இருக்கின்ற பல விடயங்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. காணி மற்றும் பொலிஸ் அதிகாரம்தான் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

உதாரணத்துக்குப் பொலிஸ் அதிகாரத்தைக் கொடுத்தால் வடக்கின் கடல் பாதுகாப்புக்குஎன்றுதனியான பொலிஸ் - இராணுவப் பிரிவை உருவாக்குவதற்கு நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று அவர்கள் சொன்னால் மத்திய அரசு அதை எதிர்க்கும். அப்போது இரு தரப்புக்கும் பிரச்சினை ஏற்படும்.

அரசு மாகாண சபையின் தீர்மானத்துக்கு இடம் கொடுப்பதில்லை என்று கூறி பிரிந்து செல்வதற்கு வாய்ப்புண்டு. - என்றார்.

## புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அது சிங்கள, தமிழ்த் தரப்புகளால் ஏற்கனவே கடும் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

ஏற்கனவே இருக்கும் சட்டத்தைவிட புதிய சட்டம் பல மடங்கு பயங்கரமானது என்று அவை கடுமையாகக் கண்டித்துள்ளன. புதிய சட்டம் அரசுத் தலைவருக்கு ஏற்கனவே இருக்கும் நிறைவேற்று அதிகாரங்களுக்கு அதிகமாக, மிதமிஞ்சிய அதிகாரங்களை வழங்குவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன.

சிங்கள எதிர்க் கட்சித் தரப்புக்களும் இம்முறை இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்க்கின்றன. இந்தச் சட்டம் இந்த மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும் என்று தலைமை அமைச்சர் டினேஸ் குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே புதிய சட்ட வரைவை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்போவதாக சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சட்ட வரைவை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு ஒரு வார காலத்தில் தமது அறிக்கையை வழங்கும், புதிய சட்டத்தில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் அதற்கெதிராக நீதிமன்றத்திற்குச் செல்வோம் என்றார் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்.

## விடுதலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தை இலங்கை ஆட்சி இழிவுப்படுத்தியுள்ளது.

நாட்டின் பண்டைய இந்து கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை அழிக்கும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் அந்த உதவியை பயன்படுத்துவதில்லை என்பதை உறுதிப்படுத்து வேண்டும் - என்று அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## பெண் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த விதிகளில் குறிப்பிடப்பட்டிருந்த நீண்ட கவுண் என்பதன் கீழ் முஸ்லிம் பெண்கள் இதுவரையில் ஹபாயாவை அணிந்து வந்தார்கள். இப்போது அந்தப் பதம் நீக்கப்பட்டுள்ளதால் சிக்கல் எழுந்துள்ளது.

இதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தை நாடுவதற்கு முஸ்லிம் சட்டச் சமூகத்தினர் துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## கடும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றாக சேதமடைந்துள்ளதுடன் மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது சில வீதி அருகில் இருந்த மரங்களும் முறிந்துள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22









# மட்டக்களப்பில் குருதிக்கொடை முகாம்!

(பழுவூரான்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டக்களப்பு வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 125



ஆவது அகவை தினத்தை முன்னிட்டு நடத்திய இரத்த தான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் புளூலகூன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இலங்கைத்தமிழ்அரசுக் கட்சி மட்டக்களப்பு வாலிபர் முன்னணித் தலைவர் லோகிதராஜா தீபாகரன் தலைமையில் நடைபெற்ற இவ் இரத்ததான முகாமில், மட்டக்களப்புபோதனாவைத்தியசாலை இரத்த வங்கி வைத்தியர் திருமதி கீர்த்திகா மதனழன் மற்றும் தாதிய உத்தியோகஸ்தர்கள் ஆகியோர்கலந்துகொண்டுகுருதிச் சேகரிப்பில்ஈடுபட்டிருந்தனர்.

இதன்போதுமட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன், கி.துரைராசசிங்கம், முன்னாள் மட்டக்களப்புமாநகர முதல்வர் தியாகராஜாசரவணபவன்,இலங்கை' தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கிருஷ்ணபிள்ளை சேயோன் உட்படஇலங்கைத்தமிழரசுக் கட்சியின்உறுப்பினர்கள்பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் குருதிக் கொடை முகாமில் பெருமளவிலான கட்சி முக்கியஸ்தர்களும், உறுப்பினர்களும் குருதிக் கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.







# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து குடாநாட்டில் கருத்தரங்கு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக சமூக ஆர்வலர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் ஞானம்ஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.



சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் வளவாளராக இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக் குழுவின்முன்னாள்ஆணையாளர் அம்பிகா சற் குணநாதன் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள், அதனால் ஏற்படப்போகும் விளைவுகள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.

இந்தச் செயலமர்வில் சட்டத்தரணிகள், பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், சமூக சேவகர்கள் மற்றும் சட்டத்திற்கும்மனிதஉரிமைக்குமான நிலைய உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயனடைந்திருந்தனர்.







காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொருள்களின் விலை வீழ்ச்சி நிவாரணமா?

**பன்னாட்டு செலாவணி நிதியத்தின் கடன் உதவி மற்றும் இதுவரை ஆட்சியாளர்கள் எடுத்து வந்த நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் பண வீக்கத்தில் குறிப்பிடத்தகுந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாகப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. குறிப்பாக, டொலர் விலை வீழ்ந்ததன் காரணமாக இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.**

**பண்டிகைக் காலமான சித்திரை மாதத்தில் பொருட்களின் விலைகள் விழ்ச்சியடைவது மக்களுக்கு மகிழ்ச்சியான செய்திதான். ஆனால், இந்த வீழ்ச்சி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாக அமைந்திருக்கிறதா என்றால், இல்லை என்பதே வெளிப்படையான பதில்.**

**பொருளாதார நெருக்கடியின் பின்னர் ஒவ்வொரு பொருளும் குறைந்தபட்சம் இரண்டு மூன்று மடங்கு விலை உயர்வைக் கண்டன. மக்களின் கொள்வனவுச் சக்தியைத் தாண்டியதாக அந்த விலை உயர்வுகள் இருந்தன. ஏற்கனவே கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் காரணமாக பெரும்பலான குடும்பங்கள் வருமான இழப்பைச் சந்தித்திருந்த நிலையில் பொருட்களின் விலையேற்றம் அவர்கள் மீது மலையை ஏற்றிவைத்த சுமையைச் சுமத்தியது. அதனால் எழமுடியாத துயரத்துக்குள் மக்கள் ஆழ்த்தப்பட்டார்கள்.**

**இதன் பக்க விளைவாக இருக்கக்கூடும் என்று சந்தேகப்படுமளவிற்குத் தற்கொலைகளின் விகிதம் அண்மைக் காலமாக அதிகரித்திருக்கிறது. வறிய பின்னணியை உடைய குடும்பங்களிலும், தொழில் வாய்ப்புகளுக்காகப் பெருமளவு கடன்களைப் பெற்ற குடும்பங்களிலும் இந்தத் தற்கொலைகள் நிகழ்ந்துள்ளதை அவதானிக்க முடிந்திருக்கிறது. பல சமயங்களில் குடும்பங்களாகவே தற்கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன என்பதும் கவனத்துக்குரியது.**

**இத்தகையதொரு பெரும் பாதிப்பிலிருந்து தற்போதைய விலை வீழ்ச்சி மக்களுக்கு ஏதாவது நிவாரணத்தைத் தருகிறதா என்பது கேள்விக்குரியது. விலைகளில் ஏற்படும் வீழ்ச்சி மகிழ்ச்சிக்குரியது ஏன்றாலும் பொருகளின் விலை அதிகரித்தளவிற்கு விலை வீழ்ச்சி ஏற்படவில்லை. ஒப்பீட்டு ரீதியில் விலை வீழ்ச்சி மிகச் சொற்பமானதே. எரிபொருள் மற்றும் சில பொருள்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சி ஒரு குடும்பத்தின் பொருளாதாரத்தில் எந்தவிதத்திலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தப் போதுமானதல்ல.**

**தற்போதையவிலைஇறக்கம்என்பதுடொலரின்பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சியின் தாக்கத்தால் நிகழ்வது மட்டுமே. நாட்டின் தேசிய உற்பத்தி வளர்ச்சியினாலோ பொருளாதார வளர்ச்சியினாலோ ஏற்படும் மாற்றம் அல்ல. இந்த விலை வீழ்ச்சி டொலர் மீண்டும் உயர்ந்தால் காணாமல்போய்விடும். நிலையான பொருளாதார மாற்றம் ஒன்று ஏற்படாமல் மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை நிகழ்த்தக்கூடிய மாறுதல்கள் நிகழாது.**

**ஆட்சியாளர்களின் கடந்த ஒன்றரை வருட கால ஆட்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் விளைவு மிகமெதுவானதாக இருக்கும் நிலையில் பாதிப்பைச் சமாளிப்பதற்கான திட்டங்களை அரசு முன்வைக்கவேண்டியதும் அவசியம்.**

## மகாவலி திட்டத்தில் 10 லட்சம் காணிகள்: தமிழர்களுக்கு ஒரு துண்டுகூட இல்லையாம்!

### பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை வருத்தம்



மகாவலி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சுமார் 10 லட்சம் காணிகளில்எந்ததமிழருக்கும் ஒரு துண்டு காணியேனும் வழங்கப்படவில்லை என யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ். நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற இந்து சமயம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் காணப்படுகின்றதொல்லியல்திணைக்களம்,வனவளத்திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன மிக வேகமாகச்செயற்படுகின்றன.

தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள், வழிபாட்டு இடங்களை தொல்லியல் வன ஒதுக்குப்பகுதிஎனகாணிகளை கையகப்படுத்தி, தமிழர்களை காணி அற்றவர்களாக்குவதே இந்தத் திணைக்களங்களின் திட்டமாகும்.

யுத்த காலப்பகுதியில் தமிழர்களுடைய புராதன அடையாளங்கள் மற்றும் வரலாற்று நிலங்கள் பாதுகாக்கப்பட்ட நிலையில், தற்போது தமிழர்களிடமிருந்து நிலப் பகுதியைகுறைக்கவேண்டும் என்பதில் தென்னிலங்கை திட்டத்தை அரங்கேற்றி வருகிறது.

மகாவலிஅதிகாரசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், பிரதேசசெயலகமோ மாவட்ட செயலகமோ கேள்வி கேட்க முடியாத அளவுக்கு அதிகாரம் உள்ள சபையாக காணப்படுகிறது.

மகாவலி எல் வலயத்தில் உள்ளடங்கும் முல்லைத்தீவு மாவட்டம், வெலி ஓயா பகுதியளவில்அல்லதுமுழுதாக சிங்களமக்களையேகுடியேற்ற திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 14 ஆயிரம் பேர் காணியற்றவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு இன்னும் காணிகள் வழங்கப்படவில்லை.

இந்து சமயம் பல்வேறு வழிகளிலும் நசுக்கப்பட்டு வரும் நிலையில், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

நானறிந்த வகையில், மட்டக்களப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், நாடாளுமன்றத்தில் இருக்கும்போது இந்து ஆலயங்கள் தொடர்பில் அதிகம் பேசுவார்.

இந்து சமயத்தில் இருக்கின்ற பல்வேறு அமைப்புகளும் ஒன்றிணைந்து வலுவான ஓர் அமைப்பின் கீழ் செயற்படும்போது தமிழ் மக்களின் நிலங்களையும் இந்து சமயத்தையும் பாதுகாக்க முடியும்எனத்தெரிவித்துள்ளார்.

## சர்வதேச விமான நிலையத்தில் எண்ணெய்க் களஞ்சியசாலை

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தகவல்

விமானஎரிபொருள்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக 35 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை சேமிப்பதற்கான களஞ்சியசாலையை நிறுவுவதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை தனியார் துறைக்கு வழங்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வருகை முனையத்தில் 25 குடிவரவு கவுண்டர்கள் நிறுவப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.



## பேரினவாத அரச அடக்கு முறைக்கு எதிராக சுவிஸ் அருட்தந்தை கடுமையான கண்டனம்!

இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் சைவத் திருமறையின் புனிதஅடையாளங்கள்மற்றும் கோவில்கள் திட்டமிடப்பட்டு சிதைக்கப்படுவதற்கு எதிரான கண்டன அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இது தொர்பில் சுவிஸ் தமிழ்கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் அருட்தந்தை சூ. டக்ளஸ் மில்ரன் லோகு கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அவரது கண்டனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

இலங்கை நாட்டில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கில் பல்வேறு கால கட்டங்களில் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி தமிழரின் கலை கலாசார சமய அடையாளங்களை அழித்தொழித்து அவர்களின் தனித்துவத்தைத் தகர்க்கும் கைங்கரியத்தைப் பேரினவாத ஆட்சியாளரின் துணையோடு விசம சக்திகள் மேற்கொண்டு வருகின்றமை கண்கூடு.

தற்போது அந்தச் செயற்பாடுகள் வேகமடைந்து வருவதைநாம்கவலையோடு நோக்குகிறோம். சமயங்கள் ஒவ்வொன்றையும் அவற்றின் புனித இடங்கள், அடையாளங்களை மதிப்பதே மத நல்லிணக்கத்துக்கும் சுமுகமான வாழ்வுக்கும் வழிகோலும்.

இலங்கையின் வடக்கு - கிழக்கை சிங்கள மயமாக்கல் மற்றும் அங்குள்ள சமய அடையாளங்களைச்சிதைத்து பௌத்தமயமாக்கல்போன்றன பெரும் கண்டனத்துக்குரியது. - என்றுள்ளது.


## உத்தியோகபூர்வ இல்லத்தை ஒப்படைத்த சஜித்தின் தாய்

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்புரீதியாக முன்னாள் ஜனாதிபதி ஓர் உத்தியோகபூர்வஇல்லத்தைகொண்டுள்ளார். அவர்இறக்கும்போது, அவரது மனைவிக்கு அந்த உத்தியோகபூர்வ வீட்டை பயன்படுத்த வாய்ப்புள்ளது.

இதன் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஹேமா பிரேமதாஸ குறித்த வீட்டை பெற்றுக் கொண்டார்.

எனினும், ஹேமா பிரேமதாஸ கொழும்பில் உள்ள அந்த உத்தியோகபூர்வ இல்லத்தைஒருபோதும்பயன்படுத்தியதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்த உத்தியோகபூர்வ இல்லத்தை அரசிடம் அவர் ஒப்படைத்துள்ளார்.



## பயங்கரவாதத் தடுப்புச் சட்டமே மோசமான நிலைக்கு காரணம்!

### இ. சந்திரசேகரன் சுட்டிக்காட்டு

தற்போது நாட்டில் மிக மோசமான நிலை தோன்றியுள்ளது, இதற்குக் காரணம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் மாமனாரான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட பயங் கரவாதத் தடுப்புச் சட்டம் என மக்கள் விடுதலை முன்னணியின்யாழ். மாவட்ட அமைப்பாளர்இ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழில்நேற்று(ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரக்கத்தனமானநடவடிக்கைகளை எதிர்காலத்தில் கொண்டுவரும் நோக்கிலே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டுவர முயற்சிக்கின்றார்கள்.

இந்நிலையில் நாட்டிலுள்ள இலஞ்ச ஊழல் மோசடிக்கு எதிராகக் குரல்கொடுத்த, மோசடிகளைஅம்பலப்படுத்திய மற்றும்ஆளும்தரப்பினருக்கு எதிராகக் குரல்கொடுத்த அனைத்து ஊடகவியளாளர்கள் உட்பட மக்களையும் காவுகொண்ட சட்டமாகவும் இது காணப்படுகின்றது.



எதிர்வரும் காலங்களில் ரணில் விக்ரமசிங்கவால் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டமூலம் பத்திரிகையில் எழுதுவதாக இருந்தாலும் சரி முகநூலில் கருத்துக்களைப் பகிர்வதாயினும் சரி அந்தக் கருத்துக்கள் அரசாங்கத்துக்கோ, நாட்டுக்கோ எதிரான கருத்துக்களாக அமையுமாயின் கருத்துத் தெரிவித்தவர்களை வேட்டையாடும் சட்ட மூலமாகக்காணப்படவுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# சுழிபுரத்தில் சிறுவர் சந்தை

சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளி மாணவர்களால் சிறுவர் சந்தை.

சங்கானை கல்வி கோட்டத்திற்குட்படட சுழிபுரம் மேற்குகலைமகள்முன்பள்ளி மாணவர்களால் இன்று ஞாயிற்றுகிழமை காலை 8 மணியளவில் கலைமகள் முன்பள்ளி முன்றலில் இடம்பெற்றது.

இதன் பொழுது கலைமகள் முன்பள்ளியில் கல்வி கற்கும் மாணவர்களால் பல் வேறுபட்ட பொருட்கள் விற்பனை செய்யபட்டதோடு சுழிபுரம் பகுதியினை சேர்ந்த





பொதுமக்கள் ஆர்வத்துடன் குறித்த சிறுவர் சந்தையில் அவதானிக்க கூடியதாக இருந்தது.

குறித்த சிறுவர் சந்தையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் வட்டுக்கோட்டை தொகுதி தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவனும் கலந்துகொண்டார்.

# பெருந்தொகைப் பணம் திருடியவர் வவுனியாவில் வைத்துக் கைதானார்!

வவுனியா - இலுப்பையடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து 12 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

நேற்று (ஞாயிற்றுக் கிழமை) முன்னெடுக்கப்பட்ட கைது நடவடிக்கையில் வவுனியா-நீலியாமோட்டைப் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள பிரபல பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றில் வங்கியில் வைப்புச் செய்வதற்காகத் தயார்செய்துவைக்கப்பட்டிருந்த 12 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக விற்பனை நிலைய உரிமையாளரால் கடந்த புதன்கிழமை வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளின் அடிப்படையில் குறித்த வர்த்தக நிலையத்தில் கடமையாற்றிகொழும்புசென்றிருந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் சூட்சுமமான முறையில் வவுனியாவிற்கு வரவழைத்து வவுனியா பஸ் நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, குறித்த பணத்தில் 9 லட்சம் ரூபா இளைஞனின் வங்கியில் உள்ளதாகவும், மிகுதி 3 லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவு செய்து விட்டதாகவும் தெரிவித்தார் எனப் பொலிஸார் கூறியுள்ளார்.

மேலதிக விசாரணைகளின்பின் அந்த இளைஞரை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.




# கள்ள மணல் ஏற்றிய 5 டிப்பர்கள் சிக்கின



சாவகச்சேரிப் பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை காலை, உரிய அனுமதிப் பத்திரம் இன்றி மற்றும் அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிச்சென்ற 5 டிப்பர் வாகனங்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டன.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி- கோப்பாய் வீதி ஊடாக கடற்கரை மணலை ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனங்களே சாவகச்சேரிப் பொலிஸாரின் சோதனையின் போது அகப்பட்டுள்ளன.

இதன்போது டிப்பர் வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியதுடன்-அதன் சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

கைதானவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலிதசெனவிரட்னதலைமையிலான பொலிஸ் குழுவினரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

# கணினிக் குற்றங்களுக்குத் திட்டமிடல்: 38 சீன பிரஜைகள் அளுத்கமவில் கைது!



கணினி குற்றங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர் என்ற சந்தேகத்தின் பேரில் சீனப் பிரஜைகள் 38 பேர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

நிதி மோசடி தொடர்பான கணினி குற்றங்களை மேற்கொள்ளும் நோக்கில் குறித்த சீனப் பிரஜைகள் தங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் சீன தூதரகத்தின் உதவியுடன் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் 33 ஆண்கள், 5 பெண்களும் அடங்குவர்.

சந்தேக நபர்கள் வசமிருந்த 40 மடிக்கணினிகள், 120 கையடக்கத் தொலைபேசிகள், பல கணினி உபகரணங்கள் மற்றும் பணம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# ஜாதிக ஜனரஜ பெரமுன என்ற புதிய அரசியல் கட்சி உதயம்



அடுத்த மாதம் ஜாதிக ஜனரஜ பெரமுன என்ற புதிய அரசியல்கட்சியைஉருவாக்க நடவடிக்கைஎடுக்கப்படும்என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த மே மாதம், நாட்டில் புதிய அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்படும், ஏனெனில் இந்த நாட்டை இந்த திவால் நிலையிலிருந்து காப்பாற்ற, தகுதி அடிப்படையிலான அரசியல் கட்சி தேவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு குடும்ப பரம்பரை அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

சோசலிசம் மற்றும் முதலாளித்துவத்துக்கு பதிலாக புதிய நடைமுறைவாதத்தில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல அரசியல் சித்தாந்தம் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# தடைசெய்யப்பட்ட விவசாய இரசாயனங்களுடன் இருவர் திவுலபிட்டியில் வைத்துக் கைதாகினர்!

திவுலப்பிட்டி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, தடை செய்யப்பட்ட விவசாய இரசாயனங்களுடன் 2 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பூச்சி கட்டுப்பாட்டு பதிவாளரின் அனுமதியின்றி லொறியில் விவசாய இரசாயனப் பொருள்களை ஏற்றிச் சென்ற போது இந்த இருவரும் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

இதன்போது பல்வேறு எடை கொண்ட பல்வேறு வகையான விவசாய இரசாயனங்கள் அடங்கிய சுமார் 1,950 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும், இதன் பெறுமதி சுமார் 1,672,500 ரூபா எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=


காலைக்கதிர்
Kalaikkathir

# சம்மாந்துறை தொழில் நுட்பக்கல்லூரிக்குள் புகுந்த காட்டு யானையால் கட்டடங்கள் சேதம்; பயிர்கள் நாசம்









சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரிக்குள் நுழைந்த காட்டு யானை கல்லூரியின் மாணவர்களால் 10 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட விவசாய பண்ணையை முற்றாக அழித்து நாசமாக்கியுள்ளதுடன் கட்டடங்களுக்கும் சேதத்தை உண்டு பண்ணியுள்ளது.

இக்காட்டு யானையின் அட்டகாசத்தால் தென்னை, வாழை, மரக்கறிவகைகள் உட்படபலபலன் தரும் மரங்களை நாசமாகியுள்ளன.

தொழில் நுட்பக் கல்லூரியின் மதில்கள் பலவற்றை உடைத்து நாசமாக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தொழில் நுட்ப திணைக்கள உதவி பணிப்பாளர் எஸ்.சீ.ஜெகத்துடன் சம்மாந்துறைதொழில்நுட்பக்கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளரும் பகுதித் தலைவருமான எஸ்.ரவீந்திரன் தொடர்பு கொண்டதையடுத்து சேத விவரங்களை திரட்டுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

யானைவெடிகளைக்கொழுத்தி யானையை மீண்டும் காட்டுக்குள் அனுப்பினர்.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த காட்டு யானைகளை நிரந்தரமாக விரட்ட நடவடிக்கைககளை மேற்கொள்ளுமாறு தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# 800 சாரதிகள், 275 நடத்துநர்களை சேவையில் இணைத்துக்கொள்ள இ.போ.ச. நடவடிக்கை!

800 சாரதிகள் மற்றும் 275 நடத்துநர்களைசேவையில்இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதற்கானஆட்சேர்ப்புவிரைவில் மேற்கொள்ளப்படும் என இ.போ.ச தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையில்1,035சாரதிவெற்றிடங்கள் மற்றும் 450 நடத்துநர் வெற்றிடங்கள் இருக்கின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஆட்சேர்ப்பு மூலம் இந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை குறையும் என இ.போ.ச தலைவர் தெரிவித்துள்ளார்.



# அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இரவு தபால் ரயில் தடம்புரள்வு

அநுராதபுரத்திலிருந்துகொழும்பு கோட்டை நோக்கி பயணித்த இரவு தபால் ரயில் தடம் புரண்டுள்ளது.

இந்த ரயில் சனிக்கிழமை நள்ளிரவுதடம்புரண்டதாகரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாகவடக்கு மார்க்கத்தில் ரயில் இயக்கம் தடைப்பட்டுள்ளது.ரயில்சேவையைவழமைக்கு கொண்டுவரும்வரையில்கொழும்பு கோட்டையிலிருந்து மஹவ வரையிலான ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனஎனவும்ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பளை பொலிஸ் பிரிவில் ஆணின் சடலம் மீட்பு

கிளிநொச்சி பளை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட பெரிய பளை பகுதியில் இவ்வாறுஆண்ஒருவரின்சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.



பெரியபளையில்வசித்து வந்த கணபதிபிள்ளை முருகேசம்பிள்ளைஎன்பவர் சனிக்கிழமை காணாமல் போயுள்ளார்.

இந்த நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அருகில் உள்ள தோட்டக்காணி ஒன்றில் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ள நிலையில் பளை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# சந்தையில் கோழி இறைச்சியின் விலை 260 ரூபாவால் எகிறியது!

சந்தையில்கோழிஇறைச்சியின்விலை 260 ரூபாவால் அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

பண்டிகைக் காலம் மற்றும் வார இறுதிக் காலம் காரணமாக கோழி இறைச்சியின் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.



இதேவேளை, கோழிப் பண்ணை தொழிலாளிகள் ஏற்கனவே நட்டத்தை சந்தித்து வருகின்றனர் எனக் கோழிப்பண்ணை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் வீரசிங்க தெரிவித்தார்.

# மலசல கூடக் குழியில் வீழ்ந்த இரண்டரை வயது குழந்தை பலி!

இரண்டரைவயதுஆண் பிள்ளையொன்று மலசல கூட குழியில் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ள சோக சம்பமொன்று அம்பாறை - அக்கரைப்பற்று நாவற்காடு பிரதேசத்தில் சனிக்கிழமை மாலை பதிவாகியுள்ளது.

உயிரிழந்தபிள்ளையின் தந்தை வெளிநாடொன்றில் தொழில் புரிந்துவரும் நிலையில்இருபிள்ளைகளின்தாயும் உயிரிழந்த பிள்ளையும் அயலில் உள்ள உறவினர் வீடொன்றுவழமைபோன்று சென்றுள்ளனர்.

அங்கு அப்பிள்ளையின் தாயார் உறவினர்களுடன் இணைந்துசிறுவேலையில் ஈடுபட்டிருந்த நிலையில் யாரும் அவதானிக்காத சந்தர்ப்பத்தில் பிள்ளை வெளியேறியுள்ளது.

வெளியேறிய பிள்ளை அருகில்இருந்தவீடொன்றில் பாதுகாப்பற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்ட மலசல கூட குழியில் வீழ்ந்துள்ளது.

சில நிமிடங்களில் பிள்ளையைக் காணாத தாயும் உறவினர்களும் தேடிய போது மலசல கூட குழியில் இருந்து பிள்ளையை எடுத்து வைத்தியசாலையில் சேர்த்த போதும் பிள்ளை உயிரிழந்துள்ளது.

இந்தச்சம்பவம்அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பெரும் சோகத்தைஏற்படுத்தியுள்ளது.மேலும் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்படும்இதுபோன்ற குழிகள் மூடப்படுவது மிக முக்கியம் என்பதை இந்தச் சம்பவம் உணர்த்தியுள்ளது.

# பேக்கரி பொருள்களின் விலையும் குறைகின்றது?



பேக்கரி பொருள்களின் விலை எதிர்வரும் வாரத்தில் அறிவிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

230 ரூபாவான ஒரு கிலோ கோதுமை மாவின் விலை தற்போது 210 ரூபாவாகக் குறைந்துள்ள போதிலும், பேக்கரி தொடர்பான உணவுப் பொருள்களின் விலைகளில் குறையவில்லை.

இந்நிலையிலேயே விலை குறித்து அடுத்த வாரமளவில் அறிவிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன கூறியுள்ளார்.

# ரயில் பாதையில் அமர்ந்திருந்தவர் ரயிலால் மோதப்பட்டு உயிரிழப்பு!

எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயிலால் மோதப்பட்டு ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம் பெற்றுள்ளது.

ரயில் பாதையில் அமர்ந்திருந்த நபர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்தார் என வாதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்வாதுவ, மொல்லிகொட பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையஒருபிள்ளையின்தந்தை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மருதானையிலிருந்து மாத்தறை நோக்கி எரிபொருளை ஏற்றிச்சென்ற ரயில் மொல்லிகொட பிரதேசத்தின் ஊடாகச் சென்று கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுளளது.

சடலம் களுத்துறை வடக்கு ரயில் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

# சீட்டு விளையாடிக் கொண்டிருக்கும்போது மின்னல் தாக்கியதில் ஒருவர் பரிதாப சாவு

## ஒருவர் காயம்

ஊவா குடா ஓயா, வெஹரய பிரதேசத்தில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஊவா குடா ஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் வெஹரய பிரதேசத்தை சேர்ந்த 51 வயதான திருமணமானவர் ஆவார்.

வெஹரய பிரதேசத்தில் உள்ள வாடி ஒன்றில் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தபோதே மின்னல் தாக்கிகுறித்தநபர்உயிரிழந்துள்ளார்.

அதேவேளை சிறு காயங்களுக்குள்ளாகி அதிர்ச்சியடைந்த மற்றொருவர் வெல்லவாய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 19 ஞாயிற்றுக்கிழமை 02.04.2023 கதிர் 16

# ஓட்டோ விபத்து ஒருவர் இறப்பு

## புத்தளத்தில் சம்பவம்

புத்தளத்தில் உள்ள அன்னதான நிகழ்வொன்றில் கலந்துகொண்டுவிட்டு சீதுவை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த ஓட்டோ ஒன்று மாரவிலவில் லொறியுடன் மோதியதில் 34 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார். இரண்டு சிறுவர்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர் என மாரவில பொலிஸார் தெரிவித்தனர்.

மாரவில ஹத்தினிய பிரதேசத்தில் 2

# வெடுக்குநாறிக்கு வந்த அமைச்சர்கள் வெறுங்கையோடு திரும்பி சென்றனர்

## தொல்பொருள் திணைக்களத்தின் கடும் எதிர்ப்பால் திட்டமிட்டபடி ஆதி லிங்க பிரதிஸ்டை இடம்பெறவில்லை



வெடுக்குநாறி மலையில் உடைத்தும் சிதைத்தும் அழிக்கப்பட்ட ஆதி லிங்க ஆலயத்தில் இன்று அதிகாலை மீண்டும் லிங்க பிரதிஸ்டை செய்வதற்கு நாட் குறிக்கப்பட்டிருந்த நிலையில் காலையில் அங்கு வந்த அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோர் ஆலய வளாகத்தைப் பார்வையிட்டுவிட்டு வெறுங்கையுடன் திரும்பிச் சென்றனர்.

முன்னதாகத்தான் வெடுக்குநாறி மலைக்கு வந்து ஆதி லிங்கத்தை மீண்டும் அங்கு பிரதிஸ்டை செய்வார் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் அறிவித்திருந்தார்.

அது போன்று ஆதி லிங்கத்தை அங்கு மீண்டும் பிரதிஸ்டை செய்ய அமைச்சரவையில் எல்லோரும் ஆதரவாக இருந்தார்கள் என்று (அதாவது மறைமுகமாக அமைச்சரவை அனுமதி) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்திருந்தார். 2

# வவுனியாவில் 20 வயதேயான இளைஞன் கைது

வவுனியாவில் 20 வயது இளைஞன் பொலிசாரால கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார். வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து 12 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டமை தொடர்பிலேயே இந்த இளைஞரைக் கைது செய்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள பிரபல பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றில் வங்கியில் வைப்புச்செய்வதற்காக தயார் செய்து வைக்கப்பட்டிருந்த 12 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டதாக விற்பனை நிலைய உரிமையாளரால் புதன்கிழமை வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

விசாரணைகளின் அடிப்படையில், குறித்த வர்த்தக நிலையத்தில் கடமையாற்றிய இளைஞர் ஒருவரைக் 2

## அனுமதியின்றி சிறுவர் இல்லம் நடத்திய குற்றச்சாட்டில்

# இருபாலை கானான் சபையிலிருந்து 13 சிறுவர்கள் அதிகாரிகளால் மீட்பு

யாழ்ப்பாணம் மாவட்டம், இருபாலையில் உள்ள கானான் ஐக்கிய சபை என்கிற கிருஸ்தவ தேவாலயத்தில் அனுமதியின்றி நடத்தப்பட்ட சிறுவர் இல்லம் முற்றுகையிடப்பட்டு 13 சிறுவர்கள் மீட்கப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறுவர் நன்நடத்தை அலுவலர்களினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மீட்கப்பட்ட சிறுவர்கள் மருத்துவ அறிக்கைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டனர். யாழ்ப்பாணம் இருபாலை பகுதியில் உள்ள



கானான் ஐக்கிய சபை என்ற கிருஸ்தவ சபை நீண்ட காலமாக அங்கு இயங்கி வருகின்றது. அந்தச் சபையில் அனுமதியின்றி சிறுவர் இல்லம் நடத்தப்படுவதாககிடைத்த தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறுவர் நன்னடத்தை அலுவலர்கள் இன்று முற்பகல் அங்கு தேடுதல் நடத்தினர்.

அங்கிருந்த 13 சிறுவர்கள் மீட்கப்பட்டு அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டனர். கிறிஸ்தவ சபையினால் நடத்தப்பட்டு 2

# இனி என்ன செய்வது என்று நாமே கூடி முடிவெடுப்போம்

## வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர் அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

அமைச்சர்களை நம்பிப் பயனில்லை. இனி என்ன செய்வது என்று நாமே கூடி முடிவெடுப்போன் என்று தெரிவித்தனர் வெடுக்குநாறி ஆதி லிங்க ஆலய நிர்வாகத்தினர்.

அமைச்சர்களான ஜீவன் தொண்டமானும் டக்ளஸ் தேவானந்தாவும் கூறியது போன்று விக்கிரங்கள் மலையில் வைக்கப்படவில்லை. அவற்றை வைக்காமலேயே அமைசச்சர்கள் திரும்பிச் சென்றனர் என ஆலய நிர்வாகிகளில் ஒருவரான பூபாலசிங்கம் தெரிவித்தார்.

“வந்த அமைச்சர்கள் கீழே நின்றபடியே பார்த்தனர். மலையில் ஏறிக்கூடப் பார்க்கவில்லை. ஒரு கட்டுமானமும் இன்றி வெறும் தரையிலேனும் சிவனை வையுங்கள் எனக் கோரினோம் தொல்லியல்த் திணைக்களத்திடம் ஒரு ஆவணத்தை எடுத்த பின்பு அதனை முயற்சிக்கலாம் எனச்சிறுபிள்ளைகளை ஏமாற்றுவது போன்று கூறிச் சென்றுவிட்டனர்” என்றார் அவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தாவும், ஜீவன் தொண்டமானும் வெடுக்குநாறிக்கு வந்தபோதும் எந்த விக்கிரகங்களும் அதே இடத்தில் வைக்கப்படவில்லை.

ஆலய விக்கிரகங்களை அந்த இடத்தில் வைப்பதற்கான ஏறபாட்டை நாம் மேற்கொண்டபோது அது தொல்லியல் திணைக்களத்திற்கு தவறான வடிவம் என திணைக்களம் தெரிவித்தே பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அங்கே சிலை வைப்பிற்கான வடிவத்தை அமைச்சரின் சக நாடாளுமன்ற உறுப்பினர் முன்னிலையில் அவரது ஆதரவாளருமே மேற்கொண்டுவிட்டு தற்போது விக்கிரகங்களை வைக்க முடியவில்லை என்பது திட்டமிட்ட ஏமாற்றலாகவே 2

# தீர்வை வழங்கக்கூடிய ஒரே தலைவர் ரணிலே

## சகலரும் ஒன்றிணைய வேண்டும் என்று பிரதமர் தினேஷ் அழைப்பு



அரசியல், பொருளாதாரம் என நாட்டிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக் கும் தீர்வைப் பெற்றுத் தரக்கூடிய – தீர்வை வழங்கக்கூடிய ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திகழ்கின்றார்.

இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

எனவே, ரணிலின் ஆட்சிக்காலத்தில் 2

# மனித குலம் இன்புற வந்துதித்த புத்தரின் பெயரால் ஏன் ஆக்கிரமிப்பு செய்கிறீர்கள்?

## நாம் மனிதர்கள் கட்சி கேள்வி

(த. தர்மேந்திரா)

மனித குலம் இன்புற வந்துதித்த புத்த பகவானை ஆக்கிரமிப்புகளை நிறுவுவதற்கு ஏன் கையில் எடுக்கின்றீர்கள் மனித குல விரோதிகளே? என்று நாம் மனிதர்கள் கட்சியின் பொது செயலாளர் ஹாரிஸ் அலி உதுமா லெப்பை வினவி உள்ளார். நாட்டின் பல இடங்களிலும் சிவ தலங்கள் ஆக்கிரமிக்கப் படுவதை, அழிக்கப்படுவதை கண்டித்து ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையில் ஹாரிஸ் அலி உதுமா லெப்பை தெரிவித்துள்ளதாவது:

ஏன் வணக்க தலங்களை உடைத்து இன்பம் காண்கிறீர்கள் மனித குலத்தின் எதிரிகளே? மனித குலம் இன்புற வந்துதித்த புத்த மகானை ஆக்கிரமிப்புகளை நிறுவுவதற்கு ஏன் கையிலெடுக்கிறீர்கள்? புழுவை கூட கொல்ல மறுத்த மனித புனிதனை ஏன் உங்களுக்கு துணைக்கு அழைக்கிறீர்கள்? இந்த நவீன யுகத்திலும் ஏன் உங்களுக்கெல்லாம் இழிந்த சிந்தனை? மற்ற சமயத்தவர்களின் தலங்களை அழித்துத் தான் உங்கள் சமயத்தை நிறுவ வேண்டுமா?



இவ்வாறு சிந்திக்கின்ற, செயல்படுகின்ற நீங்கள் எல்லோரும் மனித குல விரோதிகளே என்றார்.

# டியாகோ கார்சியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இருவரின் தஞ்ச கோரிக்கை ஏற்பு

(ந.லோகதயாளன்)

18 மாத தொடர் சட்டப் போராட்டத்தின் முதல் கட்ட வெற்றியாக டியாகோ கார்சியா தீவில் சிக்கித்தவிக்கும் தமிழர்கள் இருவருக்கு புகலிட அனுமதியை பிரித்தானிய நீதிமன்றம் வழங்கியது.

இலங்கையில் இருந்து கனடாவுக்குத் தப்பிச் செல்லும் வழியில், இந்திய கடல் கடந்த பிரித்தானிய ஆள்புலங்களில் (British Indian Overseas Territory BIOT) ஒன்றான, டியாகோ கார்சியா (Diego Garcia) என்னும் தீவில் சிக்கியுள்ள தமிழர்களில் இருவரின் அரசியல் தஞ்ச கோரிக்கைகள் முதல் தடவையாக, நீண்ட கால போராட்டத்தின் பின், அந்த பிராந்திய நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது கடந்த 18 மாதகாலமாக தொடர்ந்த தமது சட்டரீதியான போராட்டத்துக்கு கிடைத்த முதல்படியான வெற்றியாகும் என இந்த இருவருக்காகவும் போராடிய மூத்த சட்ட ஆலோகர் கீத் குலசேகரம் தெரிவித்தார். அத்துடன் இந்த முக்கிய வெற்றியானது, அந்த தீவில் சிக்கியள்ள ஏனைய தமிழர்களுக்கும், பிரித்தானியாவில் புதிதாக அரசியல் தஞ்சம் கோரிய நிலையில், ருவண்டாவுக்கு அனுப்பபடலாம் என்ற அச்சத்தில் இருப்பவர்களுக்கும் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள ஒரு தீவான டியாகோ கார்சியாவில் நிரந்தர குடிமக்கள் இல்லை. 1960கள் மற்றும் 1970களில் பூர்வீக சாகோசியன் மக்களை, இங்கிலாந்து பிரித்தானிய–அமெரிக்க படைகள் தமது கூட்டு இராணுவத் தளத்தை உருவாக்குவதற்காக வெளியேற்றினர். தற்போது இந்த தீவு பிரித்தானிய ஆளுகையின் கீழ் உள்ளது.

2021ஆம் ஆண்டு அக்டோபரில் டியாகோ கார்சியாவுக்கு வந்த முதல் 89 தமிழ் அரசியல் தஞ்ச கோரிக்கையாளர்களில் ஹம்ஷிகா கிருஷ்ணமூர்த்தி, வயது 22, மற்றும் அஜித் சஜித்குமார், வயது 22 ஆகிய இருவரும் அடங்குவர்.

இந்தியாவில் இருந்து புறப்பட்டு, கனடா செல்லும் வழியில் அவர்களின் படகு இந்தத் தீவுக்கு அருகில் பழுதடைந்ததை அடுத்து அவர்கள் பிரிந்தானிய மற்றும் அமெரிக்க கடற்படைகளால் மீட்கப்பட்டனர். அவர்களை இலங்கை மற்றும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப முற்பட்ட வேளை, பிரித்தானியாவில் உள்ள சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் தலையிட்டு அந்த முயற்சி இடைநிறுத்தப்பட்டது.

இறுதியில் சட்ட முன்னெடுப்பின் விளைவாக, அவர்களது அரசியல் தஞ்ச கோரிக்கைகளை பரிசீலிக்க பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் இயங்கும் பிரித்தானிய, இந்திய கடல் கடந்த ஆள்புல நிர்வாகம் (BIOT) சம்மதித்தது. இதற்காக இந்த தீவுக்கான புதிய சட்டங்கள் மற்றும் விதி முறைகளை உருவாக்கத் தொடங்கினர்.

இதனைத் தொடர்ந்து, 2022 இல் இலங்கையில் இருந்து சென்ற புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 200 ஆக உயர்ந்தது. ஆனால் பலர் இலங்கைக்குத் திரும்புவதற்கு இங்கிலாந்து ஆட்சியாளர்கள் வழங்கிய பணத்தை ஏற்றுக் கொண்டனர். மீண்டும் நாடு திரும்புவதற்கு சம்மதித்தனர். வேறு சிலர் தாங்களாக முன்வந்து பிரான்ஸ் தீவான ரியூனியனில் தஞ்சம் கோருவதற்கு ஒப்புக்கொண்டனர். எஞ்சிய 68 புகலிடக் கோரிக்கையாளர்களில், 26 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் போது சுதந்திரத்திற்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு இலங்கை பாதுகாப்புப் படையினரால் சித்திரவதை செய்யப்பட்டு பாலியல் துன்புறுத்தல்களுக்குள் உள்ளாக்கப்பட்ட பலர் அடங்கியிருந்தனர். 1980 களில் உயிர் பாதுகாப்பு தேடி கடல்மூலம் இந்தியா தப்பிச்சென்று, அகதிமுகாம்களில் வாழும் பெற்றோருக்கு பிறந்து, அகதி முகாமிலேயே வளர்ந்த 2

காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு
ஞாயிற்றுக்கிழமை 02.04.2023



## தீர்வை...

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற இன, மத, கட்சி பேத மின்றி அனைவரும் ஓரணி யில் திரள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

இந்த அரிய

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் எந்தக் காலத்திலும் நாம் தீர்வைப் பெற முடியாது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ரணில் இல்லாமல் சஜித், அநுர ஜனாதிபதியாகி இருந்திருந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் பணம் இலங்கைக்கு நிச்சயமாகக் கிடைத்திருக்காது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தாம் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து விலகுவார்கள் என்று சஜித் தெளிவாகக் கூறி இருந்தார்.

அதேவேளை, சர்வதேச நாணய நித்தியத்திடம் சென்ற எந்த நாடும் முன்னேறியது இல்லை என்ற கருத்தை ஜே.வி.பி. கூறி இருந்தது.

ஆனால், ரணில் ஜனாதிபதியானது முதல் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியைப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். அவரால்தான் இது சாத்தியமானது.

மறுபுறம் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. எமது நாட்டு வெளிநாட்டுத் தொழிலாளர்கள் பணம் அனுப்புவதும் அதிகரித்துள்ளது. – என்றார்.

## வெடுக்குநாறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு முன்னர் இருந்த புண்ணியவேளையில் ஆதி லிங்கம் உள்ளிட்ட கடவுள் விக்கிரகங்களைப் பிரதிஸ்டை செய்வதற்கு நாள் குறிக்கப்பட்டது. அதற்கான ஆயத்தப் பணிகள் சனிக்கிழமை இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது அங்கு வந்த நெடுங்கேணிப் பொலிஸார் அந்தப் பணிகளைத் தடுத்து நிறுத்தினர்.

தொல்லியல் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள அந்தப் பகுதியில் எந்தவித அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படக்கூடாது என்று தொல்லியல் திணைக்களம் கொடுத்த எழுத்துமூல முறைப்பாட்டின் அடிப்படையில், ஆலய பிரதிஸ்டைக்காக இடம்பெற்று வந்த பணிகள் அனைத்தையும் உடன் நிறுத்துமாறு உத்தரவிட்ட பொலிஸார், அங்கு வேலை செய்த மூவரைக் கைது செய்து தம்மோடு அழைத்துச் சென்றது.

அரசியல் தலையீடுகளை அடுத்து அந்த மூவரும் பின்னர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர் எனினும் ஆலயத்தில் எந்தப் பணிகளையும் முன்னெடுக்கத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் இன்று காலை ஆலயத்திற்கு வரும் அமைச்சர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் ஆலய மீள் பிரதிஸ்டை தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியிலேயே அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோர் ஆலய வளாகத்திற்கு வருகை தந்தனர். ஆதி லிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட இருந்த இடத்தையும் அவர்கள் பார்வையிட்டனர். எனினும் அவர்கள் மலையின் உச்சிக்குச் சென்று ஆலயம் இருந்த இடத்தைப் பார்வையிடவில்லை. கிழேயே நின்று ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினர். எனினும் விக்கிரகங்களை மீண்டும் பிரதிஸ்டை செய்வது தொடர்பில் அவர்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதைக் காரணம் காட்டி அவர்கள் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை, நீங்கள் சிலைகளை வைப்போம் என்று அறிக்கை விடும் போது நீதிமன்றில் வழக்கு இருப்பது தெரியவில்லையா என ஊடகவியலாளர்களால் அமைச்சர்களிடம் கேட்கப்பட்டபோது, அதற்கான உரிய பதில்கள் அவர்களால் வழங்கப்படவில்லை.

ஏப்ரல் 10 ஆம் திகதிக்குப் பின்னர் கலந்துரையாடி இது தொடர்பாகத் தீர்மானிக்க முடியும் என அமைச்சர்கள் தெரிவித்தனர். அவர்களது கருத்து அங்கிருந்தவர்கள் மத்தியில் ஏமாற்றத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

இதேவேளை, விக்கிரகங்களை மீண்டும் பிரதிஸ்டை செய்வதற்கான பணிகளை சனிக்கிழமை மேற்கொண்டவர்கள் ஆலய நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் இல்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அவர்களின் நடவடிக்கையினாலேயே குழப்பம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## இருபாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்ததாகக் கூறப்படும் சிறுவர் இல்லத் தில் அவர்கள் அனுமதியின்றித் தங்கவைக்கப்பட்டிருந்தனர் என்று அதிகாரிகள் கூறினர். சிறுவர்கள் துன்புறுத்தப்பட் டார்களா, அவர்க ளுக்கு உரியவகையில் உணவு வழங்கப்பட்டதா என்று விசாரணை நடத் தப்படுவதாகப் பொலிஸார் தெரிவித் தனர்.

மீட்கப்பட்ட சிறுவர்கள் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டு மருத்துவ அறிக்கை பெற்றதன் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும்

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இருந்து சூட்சுமமான முறையில் வவுனியாவிற்கு வரவழைத்து வவுனியா பேரூந்து நிலையத்தில் வைத்து கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த பணத்தில் 9 இலட்சம் ரூபாய் இளைஞனின் வங்கியில் உள்ளதாகவும், மிகுதி 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவு செய்து விட்டதாகவும் ஒப்புக்கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, நீலியாமோட்டைப் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

## இனி என்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் கருதுகின்றோம். ஏப்பிரல் மாதம் 10ஆம் திகதி வரையில் பொறுத்திருங்கள் எனக் கூறுகின்றனர். அது ஆறிய கஞ்சி பழம் கஞ்சி என்னும் நிலையினையே ஏற்படுத்தும்.

தொல்லியல்த் திணைக்களம் தனது அடையாளம் எனக்கூறும் இந்த இடம் தொல்லியல்த் திணைக்களத்திறகு உரியது என்பதை ஆதாரப்படுத்த அந்த திணைக்களத்திடம்கூட இன்றுவரை ஓர் ஆவணம் கிடையாது. இதனை கேட்கச் சாதாரண மக்களான எமக்குத்தான் அதிகாரம் இல்லை எனில் அமைச்சர்களிற்கும் இல்லை என்பதனையே இன்னைய செயல் நிரூபித்து நிறகின்றது.

இதற்குப் பிறகும் நாம் இந்த நாட்டின் இலட்சணத்தை எவ்வாறு கூறுவது அரசை நம்பமுடியவில்லை என்பதே உண்மை அதனால் அடுத்த கட்டச் செயல்பாடுகள் தொடர்பில் இனி நாமே கூடி முடிவெடுப்போம். அதனை விரைவில் அறிவிப்போம் – என்றார்.

## டியாகோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்களும் இதில் அடங்குவர். டியாகோ கார்சியாவில் வசிப்பவர்களிற்கு தற்போது மிக மட்டுப்படுத்தப்பட்ட தொடர்பாடல் வசதிகளே உள்ளன. அங்கு பலர் மருத்துவ சேவைகள் போதுமானதாக இல்லை என்றும், தகவல் தொடர்புகள் துண்டிக்கப்படுவதும் வழக்கமாக உள்ளது எனவும் முறைப்பாடு செய்து வருகின்றனர்.

இங்கு உள்ள நிலைமை காரணமக பல ரின் உடல்நிலை மற்றும் மனநிலை கடுமையாகப் பாதிப்படைந்து வருகிறது. தீவில் உள்ள பல புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட மாட்டோம் என்று உறுதியளிக்கக் கோரி பல உணவு தவிர்ப்புப் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

தற்போது 50க்கும் மேற்பட்டோர் தஞ்சம் கோரும் கோரிக்கைகளை இங்கிலாந்தின் கீழ் உள்ள பிஜஓரி (BIOT) அதிகாரிகள் மதிப்பீடு செய்திருந்தாலும், பெரும்பாலானவர்கள் நிராகரிக்கப்பட்டனர். அவர்களின் நிராகரிப்பு கடிதங்களில் நீங்கள் இலங்கைக்குத் திரும்புவதற்கு உத்தரவு வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பரில், BIOT ஆணையாளர் Paul Candler, புகலிடக் கோரிக்கையாளர்களிடம், எவரும் இங்கிலாந்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ற வகையில் பிரித்தானிய சட்டம் மாற்றப்பட்டுள்ளது என்றும் கூறியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து பல பிரித்தானிய அதிகாரிகள் தீவுக்கு சென்று அங்கு இருப்பவர்களை தமது கோரிக்கைகளை கைவிட்டு இலங்கை திரும்பும்படி பலவகையிலும் அழுத்தம் கொடுத்து வந்தனர். குறிப்பாக, கிறிஸ்தோபர் (Christoper) என்ற ஒரு அதிகாரி அரசியல் தஞ்சம் கோரியவர்களை குற்றவாளிகள் (criminals) என்று ஏளனப்படுத்தியது மட்டுமன்றி, அவர்களை எந்த ஐரோப்பிய நாடும் ஏற்றுக்கொள்ளமாட்டாது என்றும் நீங்கள் இலங்கைக்கு நாடுகடந்தப்படுவீர்கள் என்றும் எச்சரித்தார்.

இதன் விளைவாக, ஏற்கனவே பாதிப்பப்பட்டிருந்தவர்களின் மனநிலை மேலும் மோசமடைந்தது. இதன் விளைவாக, ஹம்சிகா கிருஷ்ணமூர்த்தி மற்றும் அஜித் சஜித்குமார் உட்பட ஐவர் சவர அலகு, தூண்டில் ஊசி உட்பட்ட கூர்மையான உலோகப் பொருட்களை விழுங்கி தற்கொலைக்கு முயன்றனர். இதனை தொடர்ந்து ஐந்து பேரும் அவசர மருத்துவ மற்றும் மனநல சிகிச்சைக்காக ருவாண்டாவில் உள்ள படைத்துறை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த நிலையில், கடந்த செப்டெம்பரில் 2021 இருந்து இந்த அரசியல் தஞ்ச கோரிக்கையாளர்களை சட்ட ரீதியாக பிரதிநிதித் துவப்படுத்தும் லண்டனை தளமாகக் கொண்ட மூத்த சட்ட ஆலோசகர் கீத் குலசேகரம் சட்ட நிறுவனம் ஒன்றின் உதவியுடன், இவர்களை டியாகோ கார்சியாவிற்கு மீண்டும் கொண்டு செல்வதை தடுக்க இங்கிலாந்தில் உள்ள ஒரு உயர்நீதிமன்றில் இடைக்கால தடை உத்தரவைக் கோரியிருந்தார்.

இதேநேரம் பிரித்தானியாவில் உள்ள சித்திரவதையில் இருந்து விடுதலை (Freedom From Torture) உட்பட்ட அமைப்புக்கள் மற் றும் வைத்திய நிபுணர்கள் மூலம் மருத் துவ ரீதியான ஆதாரங்களைப் பெற்று சமர்ப்பித்திருந்தார்.

இந்த ஆதாரங்களின் அடிப்படையில் மிக விரிவான வாதங்களையும் முன்வைத்திருந்தார்.

இந்த வாதங்களில் அடிப்படையில் ஹம்சிகா கிருஷ்ணமூர்த்தி மற்றும் அஜித் சஜித் குமார் ஆகியோரின் அரசியல் தஞ்ச கோரிக்கைகளை தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும், அவர்கள் இலங்கைக்கு நாடுகடந்தப்பட மாட்டார்கள் எனவும் BIOT உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் அறிவித்துள்ளது. அத்துடன் அவர்கள் பாதுகாப்பான மூன் றாவது நாட்டுக்கு விரைவில் அனுப்பப்படு வார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வெற்றி தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கீத் குலசேகரம் டியாகோ கார்சியாவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளவர்கள் இலங்கையில் இடம் பெறும் இனப்படுகொலையால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள். இவர்களில் பலர் இலங்கை அரச படைகளால் சித்திரவதை மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள்.

இலங்கையில் இன்று வரை சித்திரவதை தொடர்வதால், இவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். என்று தெரிவித்தார்.

## ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தவர் சீதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய சம்பத் கெலும் ஏகநாயக்க . உயிரிழந்தவரே ஓட்டோவைச் செலுத்தியவர் என மாரவில தலைமையக பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் தெரிவித்தனர்.

34 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை அவர் எனவும், உயிரிழந்தவரின் 4 மற்றும் 7 வயதுடைய இரண்டு பிள்ளைகள் மற்றும் தாய், மனைவி ஆகியோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# தமிழ் அரசியல் தலைமைகளுடன் விரிவான பேச்சில் ஈடுபடுவோம்

## கூறுகின்றார் கல்வி அமைச்சர் சுசில்



உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைமைகளுடன் விரிவான பேச்சில் ஈடுபடுவோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு புதிய சட்டத்தின் ஊடாக நியாயம் பெற்றுக்கொடுக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என சபை முதல்வர், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மூன்றாவது வாரத்தில் இடம்பெறும் நாடாளுமன்ற அமர்வின் போது சபைக்கு நீதியமைச்சரால் சமர்ப்பிக்கப்படும். எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 09.30 மணிக்கு சபை கூடவுள்ளது.

அன்றைய தினம் 1979 ஆம் ஆண்டு 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும், 1969 ஆம் ஆண்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி ஒழுங்கு விதிகள் மீதான விவாதம் இடம்பெறவுள்ளன.

ஏப்ரல் மாதத்துக்கான மூன்றாவது வார நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இந்தக் காலப் பகுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றுக்கு எதிரான எவ்வித விடயங்களும் குறித்த சட்ட மூலவரைவில் உள்ளடக்கவில்லை. அவ்வாறு ஏதும் காணப்படுமாயின் நாட்டு மக்கள் எவரும் உயர்நீதிமன்றத்தை நாடலாம்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டம் தொடர்பில் தமிழ் தலைமைகளுடன் விரிவான பேச்சில் ஈடுபடுவோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த புதிய சட்டத்தின் ஊடாக நியாயம் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஊழல் ஒழிப்புச் சட்ட மூலம் இம்மாத காலத்துக்குள் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அத்துடன் உத்தேச புதிய மத்திய வங்கி சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் அறிவிப்பு வெளியான பிறகு அடுத்தக்கட்ட நடவடிக்கை நாடாளுமன்றத்தால் முன்னெடுக்கப்படும். –என்றார்.

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்ட சட்டமூலம் ஜனநாயகத்திற்கு எதிரானதல்ல!

## நீதி இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

ஜனநாயக போராட்டத்தை முடக்கும் எவ்வித ஏற்பாடுகளும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

அவ்வாறான ஏற்பாடுகள் காணப்படுமாயின் நாட்டு மக்கள் எவரும் சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தலாம் என நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் சகலதரப்பினருடன் விரிவான பேச்சு முன்னெடுக்கப்பட்டு, எதிர்வரும் மூன்றாம் வாரம் இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வின் போது சபைக்கு சமர்ப்பிக்கப்படும். பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்த தரப்பினர் தற்போது உத்தேச பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராகவும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

அனைத்திற்கும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு செயற்பட்டால் அனைத்தும் தவறானதாகவே தெரியும்.

ஜனநாயக போராட்டத்தை முடக்கும் வகையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்படவுள்ளது எனக் குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும்.

நாட்டில் கடந்த வருடம் ஜனநாயக போராட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு இடம்பெற்ற போராட்டங்கள் உண்மையில் ஜனநாயக போராட்டமா என்பதை ஆராய வேண்டும்.

ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகளை முடக்கும் நோக்கம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு கிடையாது.

அவ்வாறான ஏற்பாடுகள் ஏதும் உள்ளடக்கப்படவில்லை, அவ்வாறு காணப்படுமாயின் நாட்டு பிரஜைகள் எவரும் சட்டமூலத்தை உயர் நீதிமன்றில் சவாலுக்குட்படுத்தலாம்.

ஜனநாயக போராட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் பல்கலைக்கழக மாணவர்களை தவறான முறையில் வழிநடத்துகிறார்கள்.

அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுபவர்களை உலகில் எந்த நாடுகளும் ஏற்றுக்கொள்ள முடியாது, ஆகவே பல்கலைக்கழக மாணவர்கள் உண்மையை விளங்கிக் கொண்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும். – என்றார்.

## பாற்குடபவனி!

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பங்குனி உத்தர அலங்கார உற்சவத்தின் பாற்குடபவனி இன்று ஆலயத்தை வந்தடைந்த போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள் காரைதீவு சகா)







# இலங்கை அரசாங்கம் தற்போது சரியான பாதையில் செல்கின்றது!

## எரிக்சொல்ஹெய்ம் பெருமிதம்



பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீட்சி பெறுவதற்காக இலங்கை அரசாங்கம் சரியான பயணத்தை ஆரம்பித்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை தொடர்பான ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கை பசுமை வலுசக்தி உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள முதலீட்டாளர்களுடன் கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்திருந்த அவர், நாட்டின் சமகால நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் பொருளாதார மீட்சிக்காக உடனடியான தெரிவாக சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் எல்லையைப் பெறுவதற்காக உரிய அணுகுமுறையைச் செய்து அதனைப் பெற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாட்டை நான் பாராட்டுகின்றேன்.

அத்துடன், இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட இலங்கையின் இருதரப்பு பாரிய கடன்வழங்குநர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொண்டமைக்காகவும் அவரது தலைமைத்துவத்தைப் பாராட்டும் அதேநேரம் குறித்த நாடுகளும் இலங்கை விடத்தில் கொண்ட கரிசனைகளையும் தீர்மானங்களையும் வரவேற்கின்றேன்.

இதேவேளை, இலங்கை, தனது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்குரிய பாதையைத் தெரிவு செய்து சரியான பயணத்தை ஆரம்பித்துள்ளது. இது முன்னோக்கிப் பயணிப்பதற்கும், நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கும் உதவியாக இருக்கும் என்று நம்புகின்றேன். – என்றார்.

இதேவேளை, தனது மன்னார் விஜயம் பற்றிக் குறிப்பிட்ட அவர், மன்னார் மாவட்டத்துக்குச் சென்ற நான் தலைமன்னார் பகுதிக்கு சென்ற அப்பகுதிகளைப் பார்வையிட்டதோடு, மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ உள்ளிட்ட வடக்கு, கிழக்கு ஆயர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

அதனைத் தொடர்ந்து மன்னார் செபஸ்மியார் பேராலயத்திற்குச்சென்று முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகைக்கு அஞ்சலி செலுத்தியதோடு, அவருடைய நினைவு நாள் பேருரை நிகழ்விலும் கலந்து கொண்டேன்.

இதேவேளை, மன்னாரில் அமைந்துள்ள மற்றும் அமைக்கப்படவுள்ள காற்றாலைகள் தொடர்பில் உள்ளூர் மக்கள் கவலைகளை வெளிப்படுத்தினார்கள்.

அவர்களுடைய கவலைகள் தொடர்பில் உரிய பதில்கள் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. அவர்களுடனான கலந்துரையாடல்கள் சுமுகமாக முன்னெடுக்கப்பட்டு உரிய இடங்களில் காற்றாலைகள் அமைக்கப்படுவது சிறந்த செயற்பாடாகும்.

மேலும், இலங்கையைப் பொறுத்தவரையில் காற்றாலைகள் ஊடாக மின்சாரம் பெற்றுக்கொள்ளும் செயற்பாடு சிறந்த வாய்ப்பாகும். அத்துடன் சிறந்த வேலைவாய்ப்புக்களையும் உருவாக்குவதாக அமையும்.

அதுமட்டுமன்றி, குறித்த செயற்றிட்டம், சூழலுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தாத பூச்சிய நிலையைக் கொண்டதாகும். ஆகவே, காற்றாலைகளின் பலன்களை உள்ளூர் மக்களும் உணர்ந்துகொள்வது அவசியமாகின்றது. – என்றார்.

# சுற்றுலாப் பயணிகளின் வருகையால் பெ. 170 மில்லியன் டொலர் வருவாய்

சுற்றுலாப்பயணிகளின்வருகையின் மூலம் இலங்கையின் வருமானம் பெப்ரவரி மாதத்தில் 170 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

இது ஜனவரி மாதத்தை விட 8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகம் என்பதை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

ரஷ்யா, இந்தியா, பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகளே பெப்ரவரிமாதத்தில்அதிகளவில்வந்துள்ளனர் எனத் தரவுகள் காட்டுகின்றன.

இதேநேரம் மார்ச் மாதத்தில் ஏற்கனவே ஒரு லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# கல்முனையில் நலத்திட்ட உதவி





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அரசின் நலன் திட்ட உதவிகள் பெறுபவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட இலவச அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ், கல்முனை பிரதேச செயலக பிரிவிக்குட்பட்ட 16 கிராம சேவகர் பிரிவு பிரிவுகளிலும் உள்ள மக்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் தலைமையில் சனிக்கிழமை இடம் பெற்றது.

சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் எம். புவிராஜ், உதவி முகாமையாளர் ஐ.எல். அருஸுதீன் மற்றும் கட்டுப்பாட்டு சபை தலைவர், பிரதேச அமைப்பு தலைவர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். 4,741 சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்குத் தலா 20 கிலோ அரிசி வழங்கி வைக்கப்பட்டது.

# பாதிக்கப்பட்டோருக்கு பரிகாரத்தை வழங்குவதே உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவின் இலக்கு!

## அலி சப்ரி விளக்கம்



உண்மை, மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை விரைந்து ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் அந்த ஆணைக்குழு வெறுமனே பரிந்துரைகளை மட்டும்செய்யாது, பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரத்தை வழங்கும் வகையிலான பொறிமுறையைக் கொண்டமையவுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கான விஜயம் மற்றும் உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு அமைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தென்னாபிரிக்காவுக்கு அண்மையில் விஜயம் செய்தபோது அந் நாட்டின் ஜனாதிபதி சிறில் ரமபோஷா, முன்னாள் ஜனாதிபதி எம்பகி, அரசமைப்பு முன் னாள் அமைச்சர் மிச்சல் மசுதா மற்றும் தற்போதைய வெளிவிகார அமைச்சர், நீதி அமைச்சர் உள்ளிட்டவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தோம்.

இந்தக் கலந்துரையாடல்களின் போது தென்னாபிரிக்காவின் அனுபவத்தின் அடிப்படையில் உள்நாட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்குரிய பல்வேறு உள்ளீடுகளை நாம் பெற்றுக் கொண்டுள்ளோம்.

அந்த வகையில் விரைவில் உள்நாட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பொறிமுறையொன்றை ஸ்தாபிக்கவுள்ளோம். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆணைக்குழு, கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட ஆணைக்குழு போன்று பரிந்துரைகளை மட்டும் முன்மொழிவதற்காக அமைக்கப்படவில்லை. உண்மையில் இந்த ஆணைக்குழுவின் ஊடாக பாதிக்கப்பட்ட எந்தவொரு பொதுமகனுக்கும் பரிகாரத்தை வழங்குவதற்கே முயற்சிகளை எடுப்பதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம்.

குறிப்பாக, பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு நடைபெற்ற அநீதிகளை வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்ள முடியும். அதன் மூலம் அவர்கள் இழப்பீட்டையோ, அல்லது காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் பற்றிய சான்றிதழையோ அல்லது இறப்புச் சான்றிதழையோ பெறவிரும்புவார்களாயின் அதற்குரிய அணுகுமுறைகளைச் செய்ய முடியும்.

அதேநேரம், அவர்கள் குறித்த நபர் மீதோ, அல்லது குழுவினர் மீதோ நீதிவிசாரணைகளைக் கோருவார்களாக இருந்தால் அதற்குரிய சான்றதாரங்களின் அடிப்படையில் அவற்றை முன்னெடுப்பதற்குரிய நடவடிக்களை எடுக்க முடியும்.

அதேநேரம், இந்த ஆணைக்குழுவின் முன்னால் தோன்றி பொதுமன்னிப்புக் கோருபவர்கள் கூட அதற்குரிய நடைமுறைகளைப் பின்பற்ற முடியும்.

இவ்வாறானதொரு செயற்பாடுகள் நிறைந்ததனவாகவே குறித்த ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்கின்றோம். அத்துடன், தென்னாபிரிக்காவின் மேலதிக அனுபவங்களையும் தொடர்ந்தும் பகிர்ந்து கொள்வதற்கும் எதிர்பார்த்துள்ளோம். இந்த பொறிமுறையை ஸ்தாபிப்பதன் ஊடாக இனங்களுக்கு இடையில் காணப்படுகின்ற முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளியை வைக்க முடியும் என்பதும் எதிர்பார்ப்பாகவுள்ளது. – என்றார்.

# கல்முனையில் ஒரு கிலோ கஞ்சாவுடன் மாட்டியது



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனையில் ஒரு கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கல்முனை விடே அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து வெள்ளிக்கிழமை மாலை கல்முனை சாஹிராக் கல்லூரி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் தொடர்ச்சியாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த நபரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ கஞ்சாவும் மோட்டார் சைக்கிலும் விடே அதிரடிப்படையினால் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர் 46 வயதுடையவர் எனவும் நான்கு பிள்ளைகளின் தந்தை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரசியல், மனித உரிமைகள்சார் பிரச்சினைகள் தொடர்பில் கவனத்தை குவிக்கப்போவதாக அமெரிக்கதூதர் தெரிவிப்பு



இலங்கையைப் பொறுத்தமட்டில் தாம் இதுவரையான காலமும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்டம் தொடர்பிலேயே அவதானம் செலுத்தி வந்ததாகவும், இனிவருங்காலங்களில் மீண்டும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்றவற்றின் ஊடாக அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கம், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம், மாகாணசபைத்தேர்தல்கள், அதிகாரப்பகிர்வு மற்றும் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட விவகாரங்களில் விசேட அவதானம் செலுத்தவிருப்பதாகவும் அமெரிக்கத்தூதுவர் ஜுலி சங் சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜுலி சங்குக்கும் இலங்கையின் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் சிவில் சமூகப்பிரதிநிதிகள் சார்பில் கலாநிதி ஜெஹான் பெரேரா, சட்டத்தரணி பவானி பொன்சேகா மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஷ்ரீன் ஸரூர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், அரசாங்கத்தால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம், அரசாங்கம் ஸ்தாபிப்பதற்குத் திட்டமிட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தும் அதேவேளை, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவுதல் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது அமெரிக்கத்தூதுவர் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் சிவில் சமூகப்பிரதிநிதிகளின் நிலைப்பாடு என்னவென்பதைக் கேட்டறிந்துகொண்டார்.

எனவே, இதுபற்றி எடுத்துரைத்த சிவில் சமூகப்பிரதிநிதிகள் ஏற்கனவே நடைமுறையிலுள்ள பயங்கரவாதத்தடைச்சட்டத்தை விடவும் இப்புதிய சட்டமூலம் மிகவும் பாரதூரமானது எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேபோன்று தற்போது அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஸ்தாபிப்பது தொடர்பாகப் பேசிவரும் நிலையில், அண்மையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவும் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டமை குறித்து சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அவர்கள் அமெரிக்கத்தூதுவர் ஜுலி சங்கிடம் தெரிவித்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி அரசாங்கத்தால் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று உருவாக்கப்படும் பட்சத்தில் அதற்குத் தமிழ் அரசியல் கட்சிகளின் இணக்கப்பாடு பெறப்படுவது அவசியம் எனவும், அன்றேல் அந்தப் பொறிமுறைக்கு தமிழ்மக்கள் ஆதரவளிக்க மாட்டார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதற்குப் பதிலளித்த அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங், இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் இதுவரையான காலமும் தாம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயற்திட்டம் தொடர்பிலேயே அவதானம் செலுத்திவந்ததாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது அந்தச் செயற்திட்டத்துக்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதால், இனிவருங்காலங்களில் மீண்டும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்றவற்றின் ஊடாக அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கம், மாகாணசபைத்தேர்தல்கள், அதிகாரப்பகிர்வு மற்றும் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மகாவலி திட்டத்தில் தமிழர்கள் தவிர்க்கப்பட்டமை ஏன் சட்ட ரீதியான சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை?

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சுமார் 10 லட்சம் காணிகளில் எந்த தமிழருக்கும் ஒரு துண்டுக் காணியேனும் வழங்கப்படவில்லை என யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்து சமயம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்த கலந்துரையாடலின்போதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்.

தென்னில்கையின் திட்டம் குறித்து அவர் ஒரு வரைபடத்தை வெளிப்படுத்தினார். அரச திணைக்களங்கள் ஒன்றிணைந்து தமிழர்களின் தாயகப் பகுதியைச் சுருக்குவதற்கான நகர்வுகளை எப்படி மேற்கொள்கின்றன என்பதை அவர் விளக்கினார். அப்போதே அவர் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் தமிழர்கள் முற்றாகப் புறமொதுக்கப்பட்டார்கள் என்கிற விடயத்தையும் தெரிவித்தார்.

“இலங்கையில் காணப்படுகின்ற தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன மிக வேகமாக செயற்படுகின்றன. தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள், வழிபாட்டு இடங்களை தொல்லியல் வன ஒதுக்குப்பகுதி என காணிகளை கையகப்படுத்தி, அத்தமிழர்களை காணி அற்றவர்களாக்குவதே இத்திணைக்களங்களின் திட்டமாகும்.

தமிழர்களிடமிருந்து நிலப் பகுதியை குறைக்க வேண்டும் என்கிற நோக்கத்தில் தென் இலங்கை இந்தத் திட்டத்தை அரங்கேற்றி வருகிறது. மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், பிரதேச செயலகமோ மாவட்ட செயலகமோ கேள்வி கேட்க முடியாது. அது அந்தளவிற்குச் சக்தி வாய்ந்த சபை.

மகாவலிஎல்வலயத்தில்உள்ளடங்கும் முல்லைத்தீவு மாவட்டம், வெலி ஓயா பகுதியளவில் அல்லது முழுதாக சிங்கள மக்களையே குடியேற்ற திட்டம் வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் 14 ஆயிரம் பேர் காணியற்றவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு இன்னும் காணிகள் வழங்கப்படவில்லை” என்று அவர் தெரிவித்தார்.

இலங்கை பல்லின மக்களுக்கான நாடு என்பதை அரசமைப்பு உறுதிப்படுத்துகின்றபோது (அது நடைமுறையில் இல்லாவிட்டாலும்) ஓர் இனத்திற்கு மட்டும் அபிவிருத்தி நடவடிக்கையில் வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருப்பதும் மற்றைய இனங்கள் குறிப்பாக தமிழ் மற்றும் முஸிலிம் இனங்கள் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டிருப்பதும் இதுவரையில் ஏன் சட்ட ரீதியான சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மகாவலி அபிவிருத்திச் சபைக்கு உயர் அதிகாரங்கள் இருந்தாலும்கூட அது அரசமைப்பை மீறிய ஒரு சபையல்ல. அரசமைப்பின் உறுப்புரைகள் உறுதிப்படுத்தும் அடிப்படை உரிமைகளின் கீழ் இலங்கை அரசினால் உருவாக்கப்பட்ட ஓர் சபை தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு காணி வழங்கப்படுவதைத் தடுப்பது அவர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயலல்லவா? அதனை முன்னிறுத்தி ஏன் இதுவரையில் தமிழர்கள் நீதிமன்றத்தை நாடவில்லை? இனியாவது இந்த விடயத்தில் இந்தச் சபையை சட்ட ரீதியான சவாலுக்கு உட்படுத்தும் வாய்ப்புக்கள் இருக்கின்றனவா?

# சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிக்கை சாரா ஜாஸ்மினின் இறப்புத் தொடர்பாக வேண்டும்

## என்கின்றார் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ



கட்டுவாப்பிட்டி தேவாலய குண்டுதாரியின் மனைவியான சாரா ஜாஸ்மினின் மரணம் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் மூன்றாவது அறிக்கை அவர்களின் முன்னர் வழங்கிய இரத்த பரிசோதனை அறிக்கைகளுக்கு முரணானது என்பதால் இதனை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடந்த சில நாள்களுக்குப் பின்னர் 2019 ஏப்ரல் 26 அன்று சாய்ந்தமருதில் உள்ள வீட்டில் தற்கொலை குண்டு வெடிப்பில் சாரா ஜாஸ்மின் இறந்தார் என இரத்த பரிசோதனை அறிக்கை வெளிப்படுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இறந்தவர்களில் இல்லை சாரா ஜாஸ்மின் என கூறிய நிலையில் எதை உண்மையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ கேள்வியெழுப்பியுள்ளார்.

270 உயிர்களைக் காவு வாங்கிய இந்தத் தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை அடையாளம் காண்பது இந்த நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியமானது என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க உண்மைவெளிவர வேண்டும் என்றும் அருட்தந்தை தெரிவித்துள்ளார்.

# அரச சொத்துக்களை விற்பதிலேயே அரசு அதிக கவனம் செலுத்துகிறது

## சம்பிக்க சாடல்



சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்ட மிக முக்கியமான முன்மொழிவுகளைத் தவிர்த்து, அரச சொத்துக்களை விற்பனை செய்வதில் மாத்திரமே அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அரச நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் அதற்கு வலுவான பொறிமுறை அவசியம் என வலியுறுத்திய அவர், சில சுயாதீன அதிகாரிகளுடனும் அவை தொடர்பாகக் கலந்துரையாட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும், தொழிற்சங்கங்கள் உட்பட அனைத்து தரப்பினருடனும் அரசாங்கம் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். மூடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட, தனியார்மயமாக்கப்பட்ட மற்றும் அரச உடைமையின் கீழ் தொடர வேண்டிய அரசாங்கத்தின் முயற்சிகள் அனைத்தும் கணக்காய்வு அலுவலகத்தால் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.


# இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் 2 ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு!

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் 2 ஆம் ஆண்டு நினைவு தினத்தைமுன்னிட்டுசனிக்கிழமை மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்துதூய செபஸ்தியார் பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ள மறைந்த இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் அடக்கஸ்தளத்தில் விசேட பிரார்த்தனை இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மறைமாவட்ட ஆயர், குரு முதல்வர், மறைந்த ஆயரின் உறவினர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மக்கள் எனப்பலர்கலந்துகொண்டனர்.



## மட்டக்களப்பில் பிச்சைக்கார வேடம் பூண்டு சைக்கிள் திருடிய கொழும்பைச் சேர்ந்தவர்

மட்டக்களப்பு நகரில் பிச்சைக்கார வேடம் பூண்டு சைக்கிளைத் திருடிச் சென்ற கொழும்பில் பல குற்றங்கள் புரிந்து குற்றவாளியான பொலிஸின் ஜஆர்சி பட்டியலிலுள்ள தெமட்டகொடையைச் சேர்ந்த ஒருவரை மட்டு பொதுச் சந்தை பகுதியில் வைத்து 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்தமாச்மாதம்22ஆம் திகதி பாடசாலை மாணவன் ஒருவன் நகர் பகுதி மத்திய வீதியிலுள்ள உணவு கடை ஒன்றின் முன்னால் சைக்கிளை நிறுத்திவிட்டு கடைக்குள் சென்று திரும்பிய போது 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருட்டுபோயுள்ளது.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டடையடுத்து பொலிஸார் அந்த பகுதிவீதியிலுள்ள கடைகளில் பொருத்தப்பட்டிருந்த சிசிரி கமெரா மூலம் திருடனை தேடிவந்த நிலையில் பொதுச்சந்தை கட்டட பகுதியில் பிச்சைக்கார வேடம் பூண்டு பிச்சை எடுத்துவந்த தெமட்டகொடை பிரதேசத்தைச் சோந்த 43 வயதுடைய ஒருவரைக் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் கொழும்பில் 7 குற்றச்சாட்டில் குற்றம் சாட்டப்பட்டு பொலிஸ் ஜஆர்சி பட்டியலில் சேர்க்கப்பட்டவர் எனவும் இவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று (சனிக்கிழமை) ஆயர்படுத்திபோது இவரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## மார்ச்சில் பணவீக்கம் 50.3 சதவீதமாக வீழ்ச்சி

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த பெப்ரவரி மாதம் 50.6 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம் கடந்த மார்ச் மாதம் 50.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அதன்படி கடந்த பெப்ரவரியில் 54.4 சதவீதமாகப் பதிவான உணவுப்பணவீக்கம் மார்ச்சில் 47.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததுடன், பெப்ரவரி மாதம் 48.8 சதவீதமாகப் பதிவான உணவல்லாப்பணவீக்கம் மார்ச் மாதம் 51.7 சதவீதமாக உயர்வடைந்திருக்கின்றது.

மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெனின் மாதாந்த மாற்றம் கடந்த பெப்ரவரிமாதம் 02.92 சதவீதமாகக் காணப்படுவதுடன் இதற்கு உணவல்லாப்பொருள்களின் விலைகளில் 3.71 சதவீதமாக அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்துள்ளன. இருப்பினும் உணவுப்பொருள்களின் விலைகள் 0.79 சதவீதமாதாந்த வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

அதேவேளை பொருளாதாரத் தின் அடிப்படைப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் கடந்த பெப்ரவரியில் 43.6 சதவீதத்திலிருந்து மார்ச் மாதம் 39.1 சதவீதமாகவீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலையில்அண்மைய காலங்களில் பின்பற்றப்பட்டு வரும் இறுக்கமான நாணய மற்றும் இறைக்கொள்கையின் விளைவாக வீழ்ச்சியடைந்துள்ள பணவீக்கம் இந்த ஆண்டு முழுவதும் தொடருமென எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு சிவசக்தி குடைச்சாமி மூல மூர்த்தி சிலையில் அற்புதம்

காரைதீவு சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தில் மூல மூர்த்தியாக எழுந்தருளி உள்ள குடைச்சாமி சித்தரின் திருவுருவ சிலை திடீரென்று ஒடுங்க தொடங்கி உள்ளது.

இது கருங்கல் சிலை ஆகும். இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்டு கடந்த வருட இறுதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்தியாவை சேர்ந்த சிற்ப ஆசாரியார்கள் தத்ரூபமாக செதுக்கி கொடுத்திருந்தனர். 700 கிலோ எடை கொண்டிருந்த இச்சிலையை தூக்கி வைப்பதற்கு 8 பேர் வரை தேவைப்பட்டனர்.

ஆனால் கடந்த நாட்களில் திடீரென்று சிலை ஒடுங்க தொடங்கி உள்ளது. இவ்வதிசயத்தை காண ஏராளமான மக்கள் சர்வமத பீடத்துக்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

இம்முறை பௌர்ணமி தினத்தை அண்டி ஏராளமான அதிசயங்கள் இங்கு இடம்பெறும் என்று சர்வமத பீடத்தின் ஸ்தாபகரும், தலைவருமான ஜீவாகரன் சுவாமி பக்தர்களுக்கு முன்னறிவிப்பு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

